# யோசப் முகாம்

மார்ச் 2017

INTERNATIONAL TRUTH AND JUSTICE PROJECT

## உள்ளடக்கங்களின் குறியீடு


முன்னுரை ... 3

அறிமுகம் ...

வழிமுறை

சாட்சிகளின் விபரம்

யோசப் முகாம்

விசாரணைகள்

சித்திரவதைகளும் பாலியல் வன்முறைகளும்

தடுப்புடனும் முன்வடிகட்டலுடனும் தொடர்புபட்ட லஞ்சம் பெறுதலும் மிரட்டிப் பணம் பெற்றுக்கொள்ளலும்.

குற்றம் புரிந்தவர்கள்

முடிவும் பரிந்துரைகளும்

# JOSEPH CAMP COMMANDERS

**2016-PRESENT:**
**MAJOR GENERAL JEEWAKA RUWAN KULATUNGA**

He took part in all major offensives in Northern Sri Lanka. From 2005-7 he was an Infantry Brigade Commander in Muhamalei, Jaffna. After the war he ran the military academy until in 2012 becoming the Commander of the 55th Infantry Division, in Jaffna. He received a gallantry award three times for his role in the “Counter Terrorist Operation”.

**2012-16:**
**MAJOR GENERAL BONIFACE PERERA**

He took part in almost all major offensives against the LTTE and was the commander of the East during the war and then the Competent Authority for displaced war survivors in the northern region.

**2011-12**
**MAJOR GENERAL SUMEDHA PERERA**

Appointed Deputy Chief of Staff in the Army (February 2016). He served under the former defence secretary in the Gajaba Regiment in Matale in 1989 (alongside Shavendra Silva and Jagath Dias). He was Brigadier General Staff SFHQ-W in 2009.
He was a member of the Military Court of Inquiry set up to investigate allegations raised by Channel 4 news.

**2009-2011**
**MAJOR GENERAL KAMAL GUNARATNE**

In charge of the 53 Division during the last phase of fighting. In 2012 he was sent as deputy Ambassador to Brazil. He is part of the Gajaba Regiment and also Special Forces.

**2007-2009**
**MAJOR GENERAL JAGATH**

After the war he became the Commander of the Army and and then the Chief of Defence Staff. He is currently Ambassador to Brazil, Columbia, Peru, Chile, Argentina and Suriname.

Sources: Sri Lankan SFHQ(W) website, http://www.army.lk/sfhqwanni/ and Sri Lanka Army site, 8 November 2016, http://www.army.lk/news/major-general-jr-kulatunga-assumes-office-commander-security-force-wanni

# முன்னுரை

இலங்கையில் பலருக்கு தெரிந்திருக்கும் சித்திரவதை நடைபெறும் தளங்களில் ஒன்றைப் பற்றிய ஆய்வு அறிக்கை இதுவாகும். இவ்வறிக்கை குறித்த முகாம்களில் சித்திரவதை செய்யப்பட்டு உயிர் தப்பிய 46 நபர்களின் விபரமான சாட்சியங்களையும் அவற்றிற்கு ஆதாரமாக முன்வைக்கப்பட்ட பெறுமதிமிக்க ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டவையாகும். இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் மீறல்கள் கொடூரமானவையாகும். எனினும் யோசப் முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்கள் மீது இழைக்கப்பட்ட சித்திரவதைகளினால் அனுபவித்த அவஸ்தைகளை முழுமையாகப் பிரதிபலிப்பதாக அமையாது. யோசப் முகாமில் சித்திரைவதைக்குள்ளாக்கப்பட்டு பாதிக்கப்பட்ட வேறு பலர் இருப்பினும் அவர்கள் எல்லோருடைய சாட்சியங்களையும் போதிய நேரமின்மையாலும் வளங்கள் இன்மையாலும் பெற்றுக்கொள்ள முடியாமல் போயுள்ளது.

வவுனியா நகரத்தின் மையப்பகுதியில் அமைந்திருக்கும் பாரிய எண்ணிக்கையிலான இராணுவத்தினரைக் கொண்ட முகாம் நன்கு ஆவணப்படுத்தப்பட்ட சித்திரைவதைகள் நடைபெறும் தளமாக கடந்த 30 வருட காலமாக இருந்து வந்துள்ளது. இவ்விடம் இலங்கைத் தமிழர்களைப் பொறுத்த மட்டில் சட்டத்ததை துச்சமாக மதித்து செயற்படுபவர்களின் வலுமிக்க சின்னமாக அமைந்துள்ளது. தொடர்ந்து வந்த அரசுகளான சந்திரிக்கா குமாரதுங்க, ரணில் விக்கிமசிங்க, மகிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிரிசேன முதலியோர் உட்பட யாவரும் இத்தளத்தில் கடந்த காலத்தில் நடைபெற்ற மீறல்களைப் பற்றி புலனாய்வு செய்யவோ, எதிர்காலத்தில் அவ்வாறான மீறல்களைச் செய்வதைத் தடுக்கவோ தவறி விட்டனர். யோசப் முகாமில் அண்மைகாலத்தில் நடைபெற்ற சித்திரவதையும் கற்பழிப்பும் 2016 ஆம் ஆண்டு டிசம்பர் **மாதம்** நடைபெற்றுள்ளது. இச்சம்பவம் பற்றிய விபரங்கள் ITJP ஆவணப்படுத்தியுள்ளது. இவ்வகையான சம்பவங்கள் தொடர்பில் அரசுகளின் செயற்பாடின்மையும் இவ்வகையான சம்பவங்களை அரசியல் தலைமைத்துவங்கள் மறுத்துரைத்தமையாலும் இராணுவ தளபதிகள் சித்திரவதை செய்யவும், பாலியல் துன்றுத்தல் செய்யவும் தமக்கு அனுமதி உண்டு எனக் கருதிக் கொள்ள இடமளித்துள்ளது.

குறித்த இடங்களில் காணப்படும் கைவிலங்குகள், கால்விலங்குகள், கப்பிகள் போன்ற சித்திரவதைக்கு தேவைப்படும் கருவிகளைக் கொண்டு இருப்பதும் அங்கு நடைபெற்றிருக்கக்கூடிய சித்திரவதையின் பிரமாணத்தை கவனத்தில் கொள்ளாதோ பாராமுகமாகவோ இருந்துவிட முடியாது. இவ்வகையான கூடங்கள் அங்கிருப்பதையும் தாம் தெரிந்திருக்கவில்லையென்று தொடர்ந்து வந்த இராணுவத் தளபதிகள் சொல்லித் தப்பிவிட முடியாது. 2009 ஆம் ஆண்டு முடிவடைந்த உள்நாட்டு யுத்தத்தின் போது இம்முகாம் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அல்லது LTTE எனச் சந்தேகிக்கப்பட்ட பெறுமளவிளானோரை சித்திரவதை செய்து விசாரிக்க இம்முகாம் பயன்படுத்தப்பட்டது. அங்கு நடைபெற்ற மீறல்களை அரசு கண்டும் காணாதது போல் இருந்தது. அவ்வகையான சம்பவங்கள் பல ஜெனரல் ஜெகத் ஜயசூரிய அவ்விடத்திற்கு பொறுப்பாக இருக்கும்போது அவ்விடத்தில் நடைபெற்றது. அந்நிகழ்வுகளிற்கு அங்கு நடைபெற்ற பாரிய குற்றங்களுக்கும் அவரைப் பொறுப்பக் கூறச் செய்யாது அவருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டும், பின்னர் 2009ம் ஆண்டு ஆடி மாதம் இராணுவத்தளபதி நியமனம் வழங்கப்பட்டு கொளரவிக்கப்பட்டார். 2015 ஆம் ஆண்டு அரசியல் மாற்றம் ஏற்பட்டபின்னர் அவர் பிரேசில் நாட்டில் இலங்ஙகையின் ஸ்தானிகர் பதவிக்கு நியமிக்கப்பட்டார். அப்பதவியில் இருக்கையில் சிலி, பெரு, கொலம்பியா மற்றும் சுரிநாம் முதலிய நாடுகளிற்கான தூதுவராகவும் செயற்படுகின்றார். அது மாத்திரமன்று இராணுவப் புலனாய்வுப் பிரிவினை நடத்தி வந்த, யுத்தம் முடிவடைந்து வந்த காலங்களில் அலுவலகர் ஒருவருக்கு 2015ம் ஆண்டில் ஐ நாவின் சமாதனப் படையில் மதிப்பு மிகு பதவி ஒன்றுக்கு வெகுமதியாக நியமிக்கப்பட்டார், என்பதற்கான ஆதாரங்களும் ITJP யிடம் உள்ளது. சட்டத்தை துச்சமாக மதித்து செயற்பட்ட இவ்வகையிலானோருக்கு இந்தளவு

கௌரவிக்கப்படுவது இலங்கையில் பொறுப்புக் கூறல் என்ற விடயத்திற்கு நல்ல அறிகுறியாக அமையாது.

யோசப் முகாமில் வாடிக்கையாக நடைபெற்று வந்த கொடூர செயல்களிற்கு நியாயம் பிறப்பிக்க் கூடியவகையிலான அறிக்கை ஒன்றை தயாரிப்பது கடினமாகும். இவ்வகையில் சித்திரவதை செய்யப்பட்டு உயிர் தப்பியவர்களுள் வெளிநாட்டிற்கு வந்தடைந்தவர்கள் கூட தங்களது வாழ்வை மீள ஆரம்பிப்பதற்கு இன்னமும் திண்டாடும் நிலையில் உள்ளனர். அவர்கள் தொடர்ந்தும் மனோவியல் ரீதியிலான அதிர்ச்சியினாலும் பாதிக்கப்பட்டு இருப்பதுடன் வறுமை நிலைக்கு தள்ளப்பட்டு தனித்து வாழும் தறுவாயில் தாம் வாழும் நாடுகளில் இடைக்கிடை தற்கொலை செய்ய வேண்டுமென்ற உணர்வுடன் வாழ்ந்து வருகின்றனர். இவ்வகையானோர் தங்களது வாழ்க்கையின் அதிக இருள் சூழ்ந்த நாட்களில் தாம் அனுபவித்த வேதனைகளை அதிவிசேட துணிவு கொண்டு நமக்கு மீட்டுக் கூறியமைக்கு நன்றிக் கூறக் கடமைப்பட்டுள்ளோம். அவர்கள் அவ்வாறு கூறமுற்பட்டமை எதிாவரும் காலங்களில் இவ்வகையிலான வேதனைகள் மற்றவர்களிற்கு ஏற்படுவதைத் தடுக்க உதவும் என்ற எதிர்பார்ப்பிலேயே ஆகும்.


***ஜஸ்மின் சூக்கா***
யோகான்ஸ்பேர்க்


மார்ச் 2017

# TIMELINE

KEY FOR TIMELINE

- ITJP CASES
- UK ASYLUM BUNDLES
- HOME FOR HUMAN RIGHTS CASES
- CHRD CASES
- FREEDOM FROM TORTURE CASES
- OTHER CASES




2000
2001
2002
2003
2004
2005
2006
2007
2008
2009
2010
2011
2012
2013
2014
2015
2016

# ITJP WITNESSES

40
MEN

6
WOMEN

40
LTTE

9
FORCED RECRUITS TO LTTE

15
WHITE VANNED TO JOSEPH CAMP

42
TORTURED IN JOSEPH CAMP

24
RAPED/SEXUALLY VIOLATED IN JOSEPH CAMP

32
MILITARY INTERROGATORS

10
POLICE INTERROGATORS

# அறிமுகம்

2009 ஆம் ஆண்டு முடிவடைந்த உள்நாட்டு யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலங்களிலும் அதன் பின்னரான காலங்களிலும் இலங்கையின் பாதுகாப்பு படையினரால் தொடர்ந்து இழைத்து வந்த ஓயாத தன்மையைக் கொண்ட மீறல்கள் விமர்சித்து ITJP அறிக்கையிடும் தொடரில் இதுவே அண்மையில் எழுதப்பட்ட அறிக்கை ஆகும். பாதுகாப்பு படையினர்களின் புலனாய்வுகளின் குற்றத் தன்மையை இவ்வறிக்கை முன்னிலைப் படுத்துகின்றது. அத்துடன் அப்புலனாய்வுகளின்போது தடுத்து வைக்கப்பட்டவர்களிற்கு எதிராக பரவலாக நடைபெற்ற சித்திரவதையும் பாலியல் வன்முறையையும் கூட முன்னிலைப்படுத்துகின்றது. அவ்வமையம் நடைபெற்ற செயற்பாடுகளின் விளைவாக ஒரு ‘‘சித்திரவதை கலாச்சாரத்தை’’ உருவாக்கியுள்ளது. நிறுவன ரீதியில் தண்டனையில் இருந்து தப்பவைத்து குற்றச்செயலில் ஈடுபட்ட நபர்களையும் அவர்களின் செயலிற்கு பொறுப்புக் கூற வேண்டிய மேலதிகாரிகளை பாதுகாக்க என அமைப்பு ரீதியான வலுப்படுத்தல்கள் செய்யப்பட்டிருந்தன.

இவ்வறிக்கையின் கடந்த கால யுத்த நிலையில் ஏற்பட்ட மீறல்களையும், துஸ்பிரயோகங்களையும் பற்றி கவனம் செலுத்தும் அதே வேளை ஜனாதிபதி சிறிசேன அவர்களின் நிர்வாகத்தின் பொழுது கடந்த இரண்டு வருட காலமாக நடைபெற்று வந்தவைகளிற்கும் கவனம் செலுத்தப்படுகின்றது. இவ்வறிக்கையில் ஆவணப்படுத்தப்பட்டுள்ள மீறல்களும் துஸ்பிரயோகங்களும் ஐக்கிய நாடுகளின் அண்மைக்கால அறிக்கைகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் தொடர்ந்து நிலவி வரும் சட்டத்திற்கு மதிப்பளிக்காத கலாச்சாரம் தொடருவது பற்றிய முறைப்பாடுகள், உறுதிப்படுத்தப்படுகின்றது.

## வழிமுறைகள்

**நேர்காணல்கள்:**

ஐக்கிய இராச்சியத்திலும் சுவிற்சலாந்திலும் தங்கியுள்ள 46 இலங்கைத் தமிழர்களை பல நாட்களாக தனித்தனியே சந்தித்து ITJP யின் 6 புலனாய்வாளர்கள் பரந்த அளவிலான அந்தரங்க நேர்காணல்களை நடத்தியுள்ளனர். அவ்வமையங்களில் இவ்விடயம் தொடர்பாக ஆவணப்படுத்துதல் வேலைகளின் பொழுது ITJP பெற்றக்கொண்ட வாக்கு மூலங்களில் யோசப் முகாமைப் பற்றி குறிப்பிட்டிருப்பினும் அது பற்றி ஆழமான விபரங்க்ள பெற்றிருக்காத சந்தர்ப்பங்களில் ITJP அம் முகாம் தொடர்பாக மேலும் விபரங்களைப் பெற தொடர் நேர் காணல் நடத்தியது. அதற்கு மேலதிகமாக யோசப் முகாமின் தங்களது அனுபவங்களைப் பற்றி புதிய சாட்சிகளையம் பேட்டி கண்டது. அவர்களுள் 14 பேர் தாம் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்ட இடங்களின் வரைபடங்களை சமர்ப்பித்துள்ளனர். பாதிப்புற்றோர் வழங்கிய இவ்வரைப்படங்கள் அவர்களின் சாட்சியங்களை உறுதிப்படுத்த உதவின.

**இலக்கு**::

சாட்சியங்களை தெரிவு செய்யும்போது ITJP பயன்படுத்திய பிரதான அடிப்படை யாதெனில் ஆகக் குறைந்த 3 நாட்களாவது குறித்த சாட்சி வன்னி பாதுகாப்புப் படையின் தலைமையகத்தில் தடுத்து வைக்கப்பட்டவராக இருத்தல் வேண்டும். இத்தலைமையகம் இணைச்செயற்பாட்டு பாதுகாப்பு படையின் செயலகம் (JOSFH) எனவும் அல்லது பொதுவாக ‘‘யோசப் முகாம்’’ எனவும் அழைக்கப்படுவது உண்டு. தெரிவு செய்யப்பட்ட சாட்சிகள் யுத்தத்தின் இறுதி நாட்கள் முதல் அல்லது 2009 ம் ஆண்டில் இருந்து 2016ம் ஆண்டின் இறுதிவரை யோசப் முகாமில் தடுத்து வைக்கப்பட்டவர்கள் ஆகும்.

**பாதுகாப்பு:**

வெளிநாட்டில் வசிக்கும் சாட்சிகள் இலங்கையில் இருக்கும் தங்களது குடும்பத்தினர் பழிவாங்கப்படலாம் என கடுமையான அச்சத்தில் இன்னமும் உள்ளனர். ஆதலால் அச்சாட்சிகள் வழங்கிய தகவல்கள் யாரிந்த சாட்சியத்தை வழங்கியள்ளார்கள் எனக் கண்டுக்

கொள்ள முடியாத வகையில் அவர்களை பாதுகாப்பதற்காக அவர்கள் வழங்கிய தகவல்கள் நெறிப்படுத்தப்பட்டுள்ளன செய்யப்பட்டுள்ளன.

**இரகசியத்தன்மை:**

ITJP புலனாய்வாளர்கள் மொழிப்பெயர்ப்பாளர்கள் ஆளனி தகவல்களை இரகசியத்தைப் பாதுகாப்பதற்கான இணக்கத்தை தெரிவித்திருப்பவர்கள் ஆவர். பேட்டி காணல் ஆரம்பிக்கப்படுமுன்னரே பாதிப்புற்றோருக்கு இவ்விடயம் தெரிவிக்கப்படும்.

**பாதுகாப்பான இடம்**:

சித்திர வதையாலும் பாலியல் வன்முறையாலும் பாதிப்புற்றோர் புலனாய்வாளருடனும் மொழிப்பெயர்ப்பாளருடனும் சாட்சியங்களை வழங்கும்போதும், வழங்கும் இடமும் பாதுகாப்பானது என்பதை புலப்படுத்த ITJP புலனாய்வாளர்கள் மிகுந்த கவனம் செலுத்தியுள்ளனர்.

**கவனம் செலுத்தப்பட்ட ஏனைய ஆவணங்கள்:**

சாட்சியின் அனுமதியுடன் அவர்களைப் பற்றிய வைத்திய அறிக்கைகளையும் மனோவியல் நிலை தொடர்பான பதிவேடுகளையும், சட்ட வைத்திய பதிவுகளையும் (MLRs), ITJP யினர் பெற்றுக் கொண்டனர் அத்துடன் பின்வருவனவற்றையும் பரீசீலனை செய்தது.

- யோசப் முகாமில் சித்திரவதைக்காளாகி உயிர் தப்பியவர்கள் ஐக்கிய இராச்சியத்தில் தஞ்சம் கோரிய 8 மேலதிக கோப்புகள்.

- இலங்கையில் செயற்படும் அரச சார்பற்ற ஸ்தாபனங்கள் மனித உரிமைகளுக்கான இல்லம் (Home for Human Rights) முதலிய காப்பகங்களிலிருந்து பெறப்பட்ட இலங்கையில் ஆவணப்படுத்தப்பட்ட தகவல்களும், அதாவது (1987 இல் இருந்து 2014 ஆண்டுவரையான காலப்பகுதியில்) ஆவணப்படுத்திய தகவல்களும், யோசப் முகாமில் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்ட 28 பேருடைய விபரங்களைக் கொண்ட விரிதாள் (spreadsheet), தம்மிடம் இன்னமும் மேலதிக யோசப் முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 59 சந்தேக நபர்களுடைய விபரங்கள் தம்மிடம் உள்ளன என அவ்ஸ்தாபனம் கூறியிருப்பினும் அவற்றுள் அவர்கள் குறித்த யோசப் முகாமில் தான் சித்திரவதை செய்யப்பட்டவர்களா என்பது குறிப்பிடப்படவில்லை.
- மனித உரிமைகள் மேம்பாடுகளிற்கான மையம் என அழைக்கப்படும் கொழும்பைத் தளமாகத் கொண்ட அரசார்பற்ற ஸ்தாபனம் ஒன்று 2009 ஆண்டு யோசப் முகாமில் சித்திரவதைக்குள்ளானவர்கள் வழங்கிய நான்கு சத்தியக்கடதாசிகள்.
- 1984 - 2015 வரை யோசப் முகாமில் சித்திரவதை செய்யப்பட்டதாக 51 முறைப்பாடுகளைக் கொண்ட ஐ. நா அறிக்கைகளில் இருந்தும், மனித உரிமை ஸ்தாபனங்களில் இருத்தும், நீதிமன்ற தீர்ப்புகளில் இருந்தும், சேர்க்கப்பட்டு பிரசுரிக்கபட்ட ஆவணம் இணைப்பு 1.
- கடந்த சிலகாலத்திற்குள் யோசப் முகாமில் சித்திரவதை செய்யப்பட்ட 9 நிகழ்வுகள் தொடர்பான கோப்புகள் ‘Freedom from Torture’ என்ற அரச சார்பற்ற நிறுவனம் வழங்கியது.

இவை மொத்தத்தில் 1984-2016 ஆண்டு வரையான 32 வருட காலத்தில் யோசப் முகாமில் சித்திரவதை செய்ததாக குற்றம் சுமத்தும் 138 பேரை பிரதிநிதித்துவப்படுத்துவனவாகும்

**சாட்சிகள் தொடர்பான (சுய)விபரங்கள்**:

இவ் அறிக்கை சட்டவிரோதமாக யோசப் முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்த 46 பேரின் சாட்சியங்களை அடிப்படையாகக் கொண்டவையாகும். அவற்றுள் 11 பேர் ஓகஸ்ட் 2008 இல் இருந்து டிசம்பர் 2016 வரையான பத்து வருட அளவிலான காலத்தில் ஒரு தடவைக்கு மேல் தடுத்து வைக்கப்பட்டவர்களினது ஆகும் அவர்களுள் 40 சாட்சிகள் ஆண்கள் 6 சாட்சிகள் பெண்கள் ஆவர் அவர்களிள் 22 வயதுக்கும் 55 வயதுக்கும் உட்பட்டவர்கள் ஆவர் அனேகர்

தற்சமயம் 30களின் வயதெல்லைக்குள் உள்ளவர்கள் ஆவர் இதில் 46 சாட்சிகள் அனைவரும் யோசப் முகாமில் திடமாக அடையாலம் காட்டியுள்ளனர் அனேகருக்கு தாம் சட்ட விரோதமாக தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப்பட்ட பல இடங்களில் யோசப் முகாமும் ஒன்றாக உள்ளது. அனேக நிகழ்வுகள் முரண்பாடு முடிவடைந்து கொண்டு வந்த காலத்திலிருந்து முடிவடைந்த பின்னரான காலங்களையும் அதாவது 2009 – 2010 வரையிலான காலங்களில் இடம் பெற்றவையாகும். இக்காலத்தினுள் தான் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்தும், புலனாய்வு பிரிவினர் தகவல்களைத் திரட்டுவது உச்ச கட்டத்தை அடைந்தது. குறித்த காலத்தில் யோசப் முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 28 பேர்களினது சாட்சியங்களின்படி 7 பேர் மீண்டும் மீண்டும் சட்ட விரோதமாகக் கைது செய்து சித்திரவதை செய்யப்பட்டு அம்முகாமிற்குள் துஸ்பிரயோகம் செய்யப்பட்டவர்களாகும். இது 2012ம் ஆண்டு முதல் 2016 ம் ஆண்டு வரையிலான காலத்தினுள் நடைபெற்றவையாகும்.

**LTTE யின் அங்கத்துவம்/ LTTE யுடன் தொடர்புபட்டவர்கள்:**

இவ்வறிக்கையோடு சம்பந்தப்பட்டவர்களுள் இரு சாட்சிகளைத் தவிர ஏனையோர் அவர்களுடன் தொடர்புபட்டவர்களாவர். தொடர்பு பட்டவர்கள் என கருதப்பட்டவர்கள் இலங்கை பாதுகாப்புப்ப டையினருடன் தொடர்பு படடவர்கள் என கருதும் நபர்கள் ஆவர். அதாவது LT TE யினருடனும் அல்லது அதன்நிர்வாக அமைப்புடனும் எதோ ஒரு கட்டத்தில் தொடர்பு பட்டவர்கள் ஆவர். எதோ ஒரு கட் டம் என்பது பலஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்ததாக இருக்கலாம். அனேகர் (40 சாட்சிகள் ) நேரடியாக LTTE யுடனோ அல்லது அதன் நிர்வாகத்துடனோ சம்பந்தப்பட்டவர்கள் ஆவர். அவர்களுள் 33 ஆண்களும் 6 பெண்களும் போர் அல்லது போருடன் தொடர்பான கட் டமைப்பு கழு டன் சம்பந்தப்பட்டவர்களாவர் . அவர்களுள் சிலர் சேவை மூப்புள்ளவர்காகவும்இ புலனாய்வுக்கு பொறுப்பான அலகு களை சேர்ந்தவர்களாகவும்இ ஊடகத்தை சார்ந்தவர்களாகவோ அல்லது உபகரணங்களையோ உள்ளீடு களை வழங்கியவர்களாகவோ மூத்த தலைவர்களுக்கான பாதுகாப்பை வழங்குவதோடு சம்பந்தப்பட்ட வர்களாகவோ நிர்வாகத்துறையை சேர்ந்தவர்களாகவோ அதட்கு ஒத்தாசை வழங்கியவர்களாகவோ சாரதிகளாகவோ நிர்வாக உத்தியோகஸ்தர்க ளாகவோ வைத்தியத்துறையை சேர்ந்தவர்களாகவோ இருக்கலாம். வேறு சிலர் LTTE யின் சிவில் நிர்வாகத்தின் பல்வேறு பகுதிகளடன் தொடர்புபட்டவர்களாவர். இவர்களுள் நிதித்துறை, நீதித்துறை, கணணிததுறை சார்ந்தவர்களும் அடங்குவர். ஒருவர் சிரேஸ்ட பொலிஸ் அலுவலகராக இருந்தவராவர். இவர் பின்னர் போர்களத்தில் முன்னிலையில் செயல்புரிந்துள்ளார். பல சாட்சிகள் தடுத்துவைக்கப்படட ஆரம்ப கட்டத்திலே தாம் அங்கத்தவராக இருந்ததை ஏற்றுக்கொண்டுள்ளனர். வேறு சிலர் இடம் பெயர்ந்தோர் முகாம்களில் இருக்கும்போது மீண்டும் மீண்டும் அச்சுறுத்தப்பட்டமையால் தம்மை அடையாளப்படுத்தியுள்ளனர். பலர் கைது செய்யப்பட்ட ஆளணியினரால் அடையாளம் காட்டப்பட்டிருந்தனர்.

9 சாட்சிகள் தாம் LTTE யில் இணையும்படி வற்புறுத்தப்பட்டதாக கூறினர். அவர்களுள் அனேகர் யுத்தத்தின் இறுதியில் 2008 இன் பிற்பகுதியில் இருந்த 2009 இன் முற்பகுதியில் சேர்க்கப்பட்டவர்களாவர்.. சாட்சிகள் பற்றிய தளம் LTTE அமைப்பினுள் பல்வேறுபட்ட தொகுதி அனுபவங்களை காட்டக்கூடியதாகவும் யுத்தததின் இறுதி மாதங்களிலோ, நாட்களிலோ அவர்கள் இருந்த துயர நிலையையம் 2009 ஆம் ஆண்டு மே மாதம் நடுப்பகுதியில் இறுதியாக அவர்கள் சரணடைந்தமையும் காட்டுகின்றன. அத்துடன் குறித்த காலத்தில் போர் குற்றங்கள் மனித உரிமை மீறல்கள் போன்ற சம்பவங்கள் தொடர்பாக வலுவுள்ள சாட்சியங்கள் இருப்பினும் இவ் அறிக்கையில் அவற்றைப் பற்றி ஆராயப்படவில்லை.

முன்னர் LTTE யின் அங்கத்தவராக இருந்த பல சாட்சிகள் சித்திரைவதை செய்யப்பட்ட பின்னரோ அல்லது தம்முடன் சேர்ந்தவர்கள் யார் என்பதை கூறாவிடில் சித்திரவதை செய்வோம் என அசமசுறுத்தப்பட்டவர்களோ, இராணுவ புலனாய்வுப் பிரிவுக்கு தகவல் வழங்கியுள்ளவராக மாறியுள்ளனர். அவ்வகையானோரின் வேவு பார்க்கும் வேலையினால் யோசப் முகாமிலுள்ள இராணுவப் புலனாய்வுப்பிரிவில் செயற்பாடுகள் பற்றி அவர்களுக்கு தெரியக்கூடியதாயிற்று. அதன் பயனாக அவர்களிடமிருந்து ஆட்கள் கடத்தல், சித்திரவதைகள், பாலியல் மீறல்கள், தடுத்து வைப்பு, அவர்களது வேறு நடவடிக்கைகள் தொடர்பாகவும் தகவல் பெறக்கூடியதாக உள்ளது.


# MALE WITNESS
# DETAINED IN 2009




"I was held in one of three large cells that each held 10-20 men. Each of the cells had an iron bar door with a metal sheet partially covering it and no windows. It was always quite dark. The walls were cement and felt like they had been painted."

**TWO OTHER MALE WITNESSES, DETAINED IN 2009 AND 2013, DESCRIBED SIMILAR CELLS.**

# HOLDING CELLS ABOVE GROUND



LTTE யில் அங்கத்தவம் வகித்த உறவினர்களுடன் தொடர்பு வைத்ததிற்காக மூன்று சாட்சிகள்(சிததிரவதைக்கு) இலக்காக்கப்பட்டனர். வேறு மூவர் LTTE யில் அங்கத்துவம் வகிக்காது இருந்த போதிலும் அவர்களுக்கு உதவியளித்ததாகவும், வேறு இருவர் அரசுகு எதிராக ஜனநாயக ரீதியில் அமைதியான முறையில் 2015ம் ஆண்டு பிரச்சாரம் செய்தமையினால் தடுத்துவைக்கப்பட்டிருந்தார்கள்.

## யோசப் முகாம்

### இராணுவமயம்

இலங்கையில் வட மாவட்டங்களில் பயங்கரவாத தடுப்பு நடவடிக்கைகளிற்கும் இராணுவத்தினருக்கும் பிரதான மையமாக இருந்தது யோசப் முகாம். யுத்தத்தின் உச்சக்கட்டத்தில் இராணுவத்தினரும் பொலிசும் இத்தளத்தில் இருந்தே செயற்பட்டிருந்தனா. அதனுள் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும் (MSC) வேறு இராணுவ அலகுகளும் இலங்கை வான் படையினர், பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினர்(CID) உட்பட பொலிஸ. புலனாய்வு அலகுகளும் உள்ளக பாதுகாப்பு அச்சுறுத்தலாக இருந்தவர்களையும் பயங்கரவாதத்திற்கெதிராக புலனாய்வுகளை நடத்துபவர்களும் அடங்குவர். 2015 - 2016 ம் ஆணடு வரையான காலத்தில் யோசப் முகாமில் தடுத்து வைக்கப்பட்டவர்களில் 6 பேருடைய வாக்குமூலங்களை ITJP பெற்றுள்ளது. அவர்களின் கூற்றுப்படி இலங்கை இராணுவத்தினராலும் TID யினராலும் தாம் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டுள்ள அவர்கள் யார் என்பதை தம்மை அறிமுகப்படுத்தியதன் மூலமும் அவர்கள என்னென்ன வகையிலான ஆடை அல்லது சீருடை அணிந்திருந்ததைக் கொண்டு அவர்களைத் தாம் அடையாளம் கண்டதாகக் கூறினர்.

கைது செய்யப்பட்ட நூற்றுக்கணக்கான LTTE யினரை தகவல் கொடுப்பவர்களாக மாற்றியதற்கு யோசப் முகாமிலிருந்த இராணுவப் புலனாய்வு பிரிவே பொறுப்பாகும். அவ்வாறு மாறியவர்கள் பாதுகாப்பு படையினருடன்’ சேர்ந்து பணிபுரிந்தது மாத்திரமன்றி வேறு தகவல் கொடுப்பவர்களை கையாளவும் உதவினர். LTTE யின் கட்டமைப்பையும் வளங்களையும் அழிக்க இத்தகவல் கொடுப்போர் இராணுவத்திற்கு பிரதான வளங்களாக மாறினர். அவ்வகையில் தகவல் கொடுப்பவர்களாக மாறியவர்களுக்கு முகாமில் உள்ளேயே தங்குமிட வசதிகள் செய்யப்பட்டு இலங்கைப் பாதுகாப்பு படையின் அடையாள ஆவணங் கள மாத்திரமன்றி சில சந்தர்ப்பங்களில் ஆயுதங்கள் கூட வழங்கப்பட்டிருந்தன.

குறித்த முகாமில் செயற்பாடுகள் பற்றி வரையறுக்கப்பட்ட தகவல்களே வெளிப்படையாகத் தெரிந்து இருந்து இலங்கை இராணுவத்தின் வெப்தளங்கள் கூட அம்முகாமில் உள்ள செயல்பாடுகள் பற்றி வரையறுக்கப்பட்ட தகவல்களை கொண்டுள்ளன அம்முகாமில் வரலாறும் பின்னனியும் பற்றி ஒரு சில தகவவல்கள் இருப்பினும் அதனுள் இருந்த நிர்கவாகக் கட்டமைப்பு பற்றியோ பிரிவுகள் பற்றியோ பிரிகேட்கள் பற்றியோ அவர்களுடன் இணைந்து இருந்தவர்கள் பற்றியோ அவர்களுடன் இணைந்திருந்த பற்றாலியன்கள் பற்றியோ தகவல்கள் இல்லை அம்முகாமில் உள்ள பாதுகாப்புப் பிரிவின் அலகுகள் பற்றிய தகவல்களையோ எல்லார இல் அலகுகள் ஒன்றுடன் ஒன்றுணைந்து செயற்பட்டன ஒன்றோடு ஒன்று முரணான ஆணைகளைக் கொண்ட இவர்கள் எவ்வாறு இணைந்து செயல்பட்டனர் என்ற விபரங்கள் கூட இல்லை சட்ட விரோத தடுப்பு நிலையம் யோசப் முகாம் சித்திரவதை செய்வதற்கோ பாலியல் வன்முறை உட்பட துன்புறுத்தப்படுவதற்கோ பயன்படுத்தப்பட்ட இடம் என்பது இலங்கை தொடர்பாக OHCHR இன் புலனாய்வுகளின் பொழுது நன்கு ஆவணப்படுத்தப்பட்டுள்ளன இதே விடயத்தை மனித உரிமை குழுக்கள் கூட காலம் காலமாக ஆவணப்படுத்தியுள்ளன OHCHR இன் புலனாய்வுகள் 2002 - 2011ம் ஆண்டு வரையான காலத்தில் நடை பெற்றவற்றை ஆய்வு செய்தன. யோசப் முகாம் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட ஒரு தடுப்பு நிலையம் அல்ல என்பது தெளிவு. இன் நிலையில் எதுவும் மாற்றம் ஏற்பட்டடதற்கான அறிகுறிகள் எதுவும் இல்லை அப்படி இருந்தும் இன் நிலையம் தகவல் திரட்டுவதற்கும் விசாரணைகள் அல்லது புலனாய்வுகள் நடத்துவதகும் அதனோடு சம்பந்தப்பட்டவர்களை அதிகாரமற்றவகையிலான தடுப்புகளிற்கும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

### சித்திரவதை தொடர்பான ஐ.நா. விசேட அறிக்கையாளரின் விஜயம்

2016ம் ஆண்டு மே மாதம் யோசப் முகாமை பார்வையிடுவதற்கு ஐ.நா. சபையினருக்கு சந்தர்ப்பம் வழங்கியமையை ITJP வரவேற்றிருக்கிறது. அப்போதைய சித்திரவதைகள்

கொடுரமான மனிதாபிமானமற்ற கீழ்த்தரமாக நடத்துதல் அல்லது தண்டித்தல் தொடர்பான விசேட அறிக்கையாளர் யுவான் மென்டிஸ்சும் அவரது குழுவினரும் அங்கு சென்று பார்வையிட்டு அலுவலர்களை சந்தித்தனர். அந்த முகாமின் பரிமாணத்தைக் கவனத்தில் கொள்ளும் இடத்து அவர் குறுகிய நேரத்தில் இம்முகாமை முழுமையாக சோதனையிடவோ அல்லது அவ்வாறு செய்ய முயற்சிப்பதோ நடைபெற கூடியதாக இருந்திருக்கவில்லை. இந்த முகாமின் மாதிரி படமும் ஏனைய விபரங்களும் தற்போது பெறப்பட்டுள்ளமையால் அம்முகாமிற்கான முழுமையான பரிசோதனை நடத்தக் கூடியதாக இருக்கும். இது இவ்வாறு இருக்கையில் விசேட அறிக்கையாளரின் யோசப் முகாம் விஜயத்தின் போது அவர் கண்டறிந்த விடயங்கள் இறுதியானதாகவோ அல்லது யோசெப் முகாம் சித்திரவதைக்கான தடுப்பு முகாம் அல்ல என்பதை உறுதிப்படுத்தி கொள்ள பயன்படுத்திக் கொள்ளல் ஆகாது.

### முகாமின் அமைப்பு

யோசப் முகாம் ஒரு பரந்தளவிலான பாரிய பகுதியை மாத்திரமன்றி விமானம் இறங்கக் கூடிய பாதை ஒன்றையும் கொண்டுள்ளதாக உள்ளது. இவ் அறிக்கையுடன் வழங்கப்பட்டுள்ள படத்தில் அதன் கிழக்கு எல்லை தெளிவாக இல்லை இந்த முகாம் வவுனியாவின் நகர மையத்துக்கு அண்மையில் உள்ளது. இம் முகாமிற்கு பல அங்கிகரிக்கப்பட்ட வாசல்கள் தெளிவாக தென்படுகின்றது. இம் முகாமின் விபரங்களை அறிந்த ஒரு சாட்சியின் கூற்றுப்படி அப்படத்தின் இராணுவ புலனாய்வு பிரிவினரது ஐந்து தடுப்பு நிலையங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. நான்கு ஆண்களிற்கும் ஒன்று பெண்ணிற்குமாக உள்ளது.

இந்நிலையங்களிற்கு அருகாமையில் இரானுவ புலனாய்வு இப் பிரிவினரின் (MIC) அலுவலகங்களும் தங்குமிடங்களும் அண்மித்தே உள்ளன. இப்படத்தினை கூகுழ் ஏர்த் (Google Earth) தின் படங்களுடன் மேல வைத்து மாற்றிப்பார்க்க ITJP முயற்சித்தது.

### தடுப்புக்களும் விசாரணைகளும்

குறிப்பிட்ட நேரத்தில் எத்தனை பேர் தடுப்பில் இருந்தார்கள் என்பது காலத்துக்கு காலம் வித்தியாசப்படும். யுத்தத்தின் இறுதி நாட்களிலும் யுத்தம் முடிவடைந்து சரணடைந்து வந்த காலங்களிலும் இந்த நிலையத்திற்கு தடுத்து வைக்கப்பட்டவர்களின் போக்குவரத்து அதிகரித்தது.
இந்நிலையத்திற்கு பெரும்பாலானவர்கள் யோசப் முகாம் அமைந்திருந்த இடத்தைக் கடத்தப்பட்டு தடுத்து வைக்கப்பட்டவர்களிடம் இரகசியமாக வைத்திருந்தனர். கைது செய்யப்பட்டவர்கள் முகாமிற்கு கொண்டு வரப்பட்ட போதும் வெளியில் எடுத்துச் செல்லப்பட்ட போதும் கண் கட்டப்பட்ட நிலையிலேயே எடுத்துச் செல்லப்பட்டுள்ளனர். அவ்வாறே முகாமில் ஒரு அறையில் இருந்து வேறு அறைக்கு கொண்டு செல்லும் போது வாகனங்களிலே கண் கட்டப்பட்ட நிலையிலே கொண்டு சென்றுள்ளனர். அவர்கள் வாகனத்தில் ஏற்றப்பட்டு பரிசோதனை நிலையங்கள் ஊடாகவும் வாகனங்கள் கடக்கும் திட்டிகள் இருந்தது போன்று தோன்றியதாக சாட்சிகள் கூறியுள்ளனர். சாட்சி ஒருவராவது தான் இருந்த இடத்திற்கு வெளியே இருந்த நிலைப்பற்றி விபரிக்கக்கூடியதாக இருக்கவில்லை ஒரு சிலர் கண் கட்டப்படாது கொண்டு செல்லப்பட்டுள்ளனர். அவர்கள் பாரிய மரங்களை கண்டதாகவும் வெளியேறும் இடத்தில் மண்திட்டி மேல் அமைந்த உலோகத்தினால் செய்யப்பட்ட சிங்கத்தின் சிலைகளையும் கண்டதாகவும் கூறியுள்ளனர்.

### யோசப் முகாமிற்கு இடமாற்றம்

அநேக சாட்சிகள் கைதுசெய்யப்பட்ட இடத்தில் இருந்தோ பாதுகாப்பு படையிடம் சரணடைந்த இடத்தில் இருந்தோ நேரடியாக யோசப் முகாமிற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். வேறு சிலர் இடம் பெயர்ந்த முகாமில் இருந்து யோசப் முகாமிற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். வேறு சிலர் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு கொண்டு இருக்கையில் அல்லது வேறு தடுப்பு நிலையங்களில் இருக்கையில் அடையாளம் காணப்பட்டு இராணுவத்திடம் தகவல் வழங்குவோரால் சுட்டிக் காட்டப்பட்ட போது யோசப் முகாமிட்கு இடமாற்றம் செய்யப்படுகின்றனர். வேறு சிலர் தாம் தடுத்து வைக்கப்படும் இடத்திலிருந்து இடைக்கிடையே விசாரணைக்காக யோசப் முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டதாக கூறியுள்ளனர் எனினும் பலருக்கு முகாம் தங்களைத் தடுத்து வைத்திருந்த முகாம்களின் கோர்வையில் ஒன்று எனக்

# JOSEPH CAMP PERIMETER OUTLINED




SECTION MATCHED TO WITNESS DRAWING (SEE PAGE 18)
APPROXIMATE EASTERN BOUNDARY

# MAP COMPARISON TO MALE WITNESS DETAINED IN 2009




1 MALE INTERROGATION ROOMS

2 FEMALE INTERROGATION ROOMS

3 MILITARY INTELLIGENCE COMMANDER OFFICE

4 CELLS FOR MALE DETAINEES HELD BY MILITARY INTELLIGENCE


5 MILITARY INTELLIGENCE QUARTERS

6 MAJOR GAMAGE'S OFFICE

7 CELLS FOR FEMALE DETAINEES HELD BY MILITARY INTELLIGENCE

8 GENERAL JEGATH JAYASURIYA'S OFFICE

9 QUARTERS FOR INFORMERS


MILITARY INTELLIGENCE AREA 2009
KANDY/JAFFNA
ARMY CAMP
CHECK POINT
3KM
AIRPORT ROAD
CAMP
CHECK POINT
5
8
MIC GROUND
9
4
1
5
4
2
5
4
6
UNDERGROUND
5
7

குறிப்பிடப்பட்டுள்ளனா். அனேகா் தனித்தும் வேறு சிலா் குழுக்களாகவும் அங்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளனா். 2009ம் ஆண்டு மே மாதத்தில் தாம் LTTE உறுப்பினா் 90 பேருடன் அங்கு எடுத்துச் செல்லப்பட்டதாக விபரித்து உள்ளாா். இன்னொருவா் அதே வருடத்தில் ஆகஸ்ட் மாதத்தில் 30 பேர் கொண்ட குழுவிடம் ரம்பைக் குளம் முகாமில் இருந்து யோசப் முகாமிற்கு எடுத்துச் செல்லப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளாா்.

*''எம்மை எடுத்துச் செல்கையில் எம் குழுவில் இருந்த ஒருவரது கண்ணும் கட்டப்படவில்லை ஆனால் வாகனத்தின் கண்ணாடிகள் கறுப்பு நிறம் பூசப்பட்டு இருந்தாலும் வாகனத்தில் இருந்து கீழே பார்த்துக் கொண்டிருக்க சொல்லப்பட்டு இருந்தாலும் நாம் எதனையும் பார்க்க கூடியதாக இருக்கவில்லை. எம்மை எடுத்து செல்கையில் எம்முடன் வேறு வாகனங்கள் செல்லும் சத்தம் கேட்டது. ஒலி பெருக்கிகளின் சத்தமும் கேட்டன. இவ்வாறு ஒரு அரை மணித்தியாலத்திற்கு குறைந்த காலமே இருந்தது. வாகனம் அதிவேகமாக அழுத்தமான தரையில் சென்றது. பின்னர் வாகனத்தின் வேகம் குறைய இரண்டொரு திட்டிகள் மீது ஏறி சென்றது. வாகனம் மெதுவாக சென்று நிறுத்தப்பட்டது. ஒரு படலை (Gate) திறக்கும் சத்தம் கேட்டது அதன் பின் மீண்டும் சுமார் இரண்டு நிமிடம் செலுத்தப்பட்ட பின் நிறுத்தப்பட்டது. நாம் வாகனத்தில் இருந்து வெளியே இறங்கினோம். அப்போது நாம் ஒரு இராணுவ முகாமில் இருப்பதைக் கண்டோம்.*

2009ம் ஆண்டில் ஒரு ஆண் சாட்சி கூறியது.

**ஆட்கடத்தல்கள்**

நாம் விசாரித்த 15 சந்தர்ப்பங்களில் சாட்சிகள் தம் வீட்டில் இருந்து கடத்தப்பட்டு உள்ளனர் அல்லது பரிசோதனை நிலையங்களில் இருந்து கடத்தப்பட்டுள்ளனர் அல்லது வீதியில் சென்று கொண்டு இருக்கும் பொது கடத்தப்பட்டுள்ளனர். இவ்வாறு கடத்தப்பட்ட சிலர் பின்னர் யோசப் முகாமிற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். 2014ம் ஆண்டில் கடத்தப்பட்ட மனிதர் ஒருவரின் கதை வழக்கமானது.

*''முல்லை தீவில் எனது இல்லத்தில் இராப் போசனம் அருந்திக் கொண்டு இருந்தேன். அப்போது எனது கதவை யாரோ தட்டியது கேட்டது. எனது அம்மா சென்று கதவை திறந்தார். சாதாரண உடை அணிந்த 5 பேர் அம்மாவை தள்ளிக் கொண்டு நுழைந்தனர். அவ்வாறு செய்கையில் சத்தம் இட வேண்டாம் என்று எச்சரிக்கை செய்தனர். வந்தவர்களுள் ஒருவர் தனது கைதுப்பாக்கியை எனது தலையை நோக்கி வைத்தார். எவராவது குழறினால் நான் சுடப்படுவேன். என எச்சரிக்கை செய்தார். வந்தவர்கள் கொச்சை தமிழில் பேசினார்கள். எனது அம்மா கெஞ்சி என்னை விடுவிக்க கோரியும் என்னை ஒரு வாகனத்திற்கு இழுத்து சென்றார்கள். அது ஒரு வெள்ளை நிற டொல்பின் ரக (Toyota Hiace) வாகனம் வெளியே நிறுத்தப்பட்டிருந்தது. அவர்கள் எனது பெயரையோ அடையாள அட்டையையோ கோரவில்லை. அவர்கள் என்னை வாகனத்தின் உள்ளே தள்ளி விட்டு ஆசனங்களுக்கு இடையில் முகம் குப்புறக் கிடத்தினார்கள். யாரோ எனது கைகளை துணியினால் கட்டினார்கள்''.*

2014ம் ஆண்டின் ஆண் சாட்சி

ITJP பேட்டி கண்ட ஒரு பெண் சாட்சி 2009ம் லும் அதற்கு பின் ஒரு வருடத்திலும் வெள்ளை வானினால் இரு முறை கடத்தப்பட்டு உள்ளார்.

**தடுத்து வைக்கப்படும் கூடங்கள்**

சாட்சிகள் தாம் தடுத்து வைக்கப்பட்டிருந்த கூடங்களின் விபரங்களை பல்வேறுப்பட்ட விதத்தில் விபரித்துள்ளனா். அனேகா் ஏதோ ஒரு விதமாக விபரித்து இருந்தும் 14 பேர் அக் கூடங்களில் ஞாபகத்தில் மீட்டு படம் வரைந்து காட்டியுள்ளனா். கூடங்களிற்கு யன்னல்கள் இருக்கவில்லை வெளிச்ச வசதியும் இருக்கவில்லை என்பது சகலரும் வழங்கிய விபரங்களில் இது பொதுவிடயம் ஆகும். சாட்சிகள் நிலமட்டத்திலிருந்து கூடங்களைப்டிபற்றியும் நில மட்டத்திற்கு கீழ் உள்ள கூடங்கள் பற்றியும் விபரித்துள்ளனர். ஒரு சிலர் இரண்டு மாடி கட்டிடத்தில் இருந்த கூடங்கள் பற்றியும் விபரித்து இருந்தனர். அநேகமான இக்கூடங்கள் இரும்புக் கம்பிகளையோ இரும்பு கதவுகளையோ கொண்டதாக இருந்தனால் இது ஆட்களை தடுத்து வைப்பதற்கான கூடங்கள் என தென்பட்டன.

10 சாட்சிகள் தம்மை தடுத்து வைத்திருந்த கூடத் தொகுதிக்கு நிலத்திற்கு கீழ் 10-15 படிகளை கடந்தே செல்ல வேண்டியிருந்து. என விபரித்துள்ளனர். சிலர் கூடங்கள் 20 பேரையே தடுத்து வைக்க விஸ்தீரமாக இருந்தன. வேறு சில கவனத்தை ஈர்க்கும் வகையிலான குறும் கூடங்களாக இருந்தன.

"*எனது உயரம் 1.7 மீற்றர் அளவில் இருக்கும். ஏன்னை தடுத்து வைத்திருந்த கூடம் மிகவும் சிறியது. அதனுள் நான் கிடக்கையில் எனது காலை நீட்டிக் கொண்டு இருக்க முடியாது. ஆக்கூடத்தின் அகலம் சுமார் 1 மீற்றர் இருக்கும் நான் எழுந்து நின்றால் எனது தலைக்கு மேல் கூடத்தின் மேற்பகுதிக்கும் இடையில் 25 சென்றிமீற்றர் இடைவெளிதான் இருந்தது. மலசலம் கழிப்பதற்கு என்று சிறிய துவாரம் (squatting toilet pan) ஒன்றும கழிவு நீர் செல்லக்கூடிய சிங்க் (sink) ஒன்றும் மூலையில் இருந்தன".*

ஒரு ஆண் சாட்சி 2010 இல்

"*அது ஒரு சிறிய அறை நான் நீட்டி நிமிர்ந்து அதில் படுக்க முடியாது, அந்த அளவிற்கு சிறியது. நான் அவ்வறையில் நித்தரை கொள்ள முடியாது. ஏனெனில் நிலத்தில் தண்ணீர் ஊற்றி விடுவார்கள்".*

ஒரு பெண் சாட்சி 2013 இல்

**தடுத்து வைத்திருந்த நிலைமைகள்**

யோசப் முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்கள் சில நாட்கள் முதல் மாதங்கள் வரையிலான காலத்திற்கு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். 3 சாட்சிகள் 18 மாத காலம் வரை இம்முகாமில் அடைககப்பட்டு வைக்கப்பட்டிருந்தனர். அவர்களுள் எவரேனும் யோசப் முகாமில் வைத்து ICRC இனாலும் சந்திக்கவுமில்லை. குடும்ப உறுப்பினர்கள் கூட சந்திக்கவுமில்லை.

தடுத்து வைக்கப்பட்டிருந்த இருவர் தாம் அங்கு இருக்கையில் நிலத்தில் பதிக்கப்பட்டிருந்த உலோக இணைக்கப்பட்ட கைவிலங்குகளுடன் தங்கி இருந்ததாக கூறியுள்ளனர். ஒவ்வொருத்தருடைய அனுபவமும் ஒரேமாதிரியாக இருக்கவில்லை அனேக தடுப்பில் இருந்தவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த காலத்தில் தமது அந்தரங்க உறுப்புக்களை மறைக்கக்கூடிய துணியுடன் மாத்திரம் இருந்துள்ளார்கள். ஒரு சிலர் தம்முடைய ஆடைகளை தம்மிடம் வைக்க அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

தடுப்பு நிலையங்களின் கூடங்களின் நிலை பொதுவாக சுகாதாரம் மிகவும் இழிவான நிலையில் இருந்தது. அக்கூடத்தில் சுத்தம் செய்வதற்கான நீர் வசதியேதும் இருக்கவில்லை நிலத்திற்கு கீழ் உள்ள அறையில் தங்க வைத்திருந்த சாட்சிகள் தாம் மலசலம் கழிக்க தேவை ஏற்படும் போது வெகு நேரம் கதவைத் தட்டிய பின்னரே காவலாளிகள் மலசல கூடத்திற்கு அழைத்துச் செல்வார்கள் எனக் கூறியுள்ளார்கள். பொதுவாக மலசல கூடத்திற்கு கதவு இருப்பதில்லை பல சந்தர்ப்பங்களில் சலம் கழிக்க போத்தலும் மலம் கழிக்க பிளாஸ்டிக் பையும் வழங்கப்பட்டிருக்கும் அவற்றையும் அப்புறப்படுத்த இடைக்கிடை எடுத்துச் செல்வார்கள் ஒரு சிலரை கிரமமாக தம்மைக் கழுவிக் கொள்ள அழைத்துச் செல்வார்கள் வேறு சிலர் அழைத்துச் செல்லப்படுவதில்லை ஒரு சாட்சி தன்னை துப்புரவுப்படுத்திக் கொள்ள சந்தர்ப்பம் இல்லாது 3 மாதம் வரை காத்திருந்தார் தடுத்து வைக்கப்பட்டவர்களில் பலர் தமக்கு வழங்கப்படும் உணவு கதவின் கீழ் உள்ள இடைவெளியாக வழங்கப்படுவதாக விபரித்துள்ளார். சாப்பாடு குளிர்ந்த நிலையில் இருக்கும் சாப்பிட முடியாத அளவிற்கு தரம் குறைந்ததாக இருக்கும் ஒரு சிலருக்கு அடிப்படை வைத்திய வசதி அளிக்கப்பட்டது. (ஒருவர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்தார்) அனேகருக்கு அரச வசதி அவர்கள் விசாரிக்கும் போது ஏற்பட்ட காயங்களுக்கு யுத்தம் முடியும் போது இருந்த காயங்களிற்கோ வைத்திய வசதி அளிக்கப்பட வில்லை.

தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களிடையே வரையருக்கப்பட்ட அளவே தொடர்பு கொள்ள கூடியதாக இருந்தது. வேறு நபர்களும் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள் என்பது விசாரிக்கும் அறையில் இருந்தோ வேறு அறைகளில் இருந்து குழறும் அழுகை ஒலி ஊடாகத்தான் தெரிய வரும். அனேக தடுப்பில் உள்ளவர்கள் பெண்கள் உட்பட யோசப் முகாமில் தனித்தே வைக்கப்படடிருந்தனர்.

வேறு தடுத்து வைக்கப்பட்டவர்களுடன் தொடர்பு கொள்ள முடியாத நிலை இருந்தது. ஆதலால் கைதிகளுக்கிடையில் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள வாய்ப்பிருக்கவில்லை ஒரு பெண் 2010 இல்தான் எவ்வாறு தடுத்து வைக்கப்பட்டிருந்தார் என விபரித்துள்ளார். 16 முதல் 17 வயது கொண்ட நான்கு பெண் பிள்ளைகளுடன் தடுத்து வைக்கப்பட்டதாகவும் தங்கள் கால்கள் கைகள் கட்டப்பட்ட நிலையில் நிர்வாணமாக அமர்ந்திருக்க நேரிட்டதாம்.

**விசாரணைகள்**

2009 மே மாதத்தில் இருந்து LTTE யின் கட்டுப்பாட்டு பகுதியில் இருந்து 282,000 மக்கள் வெளியேறியது இராணுவத்தினரதும் பொலிசாரினதும் புலனாய்வுப் பிரிவினதும் LTTE யின் ஆளணிபற்றியும் அதனது கட்டமைப்பைப் பற்றியும் அறிந்து கொள்ள முன்னர் ஒருபோதும் இருந்திராத ஒரு வாய்ப்பை அளித்தது. அவ்வமையம் புலனாய்வுத் தகவல்கள் திரட்டும் பாரிய முயற்சிக்கு யோசப் முகாமில் இருந்தவர்களுக்கு அப்பால் வேறு அலுவலர்களைக் கொண்ட குழுக்களைக் பயன்படுத்த வேண்டியேற்பட்டது. அவற்றின் செயல்வலுவை ஊழல் பாதித்தது. பாதுகாப்புப்படையினர் தேடி வந்த பல முக்கிய LTTE புள்ளிகளும் அவர்களினது குடும்பத்தினரும் அவர்களை தொடர்ந்து தேடித்திரிந்த பாதுகாப்பு உத்தியோகஸ்தருக்கு லஞ்சம் வழங்கி தப்பிச்செல்ல வாய்ப்பளித்தது. 2009ம் ஆண்டிற்கு பின்னான காலங்களில் அவ் அமையம் இருந்த புலனாய்வு ஒழுங்குகளை மேலும் சிறந்த வகையில் ஒருங்கமைத்து சீரான வழிமுறைகளை பின்பற்றி அவ்வமையம் இருந்த புலனாய்வு ஒழுங்குகளிற்கு ஒத்தாசையாக செயற்பட்டு LTTE ஆளணியினரையும் அவர்கள் புதைத்து வைத்திருந்து ஆயுதங்களையும் கண்டறியும் வேலைக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டது. இன்று 8 வருடங்கள் கடந்த பின் அவ்வகையான தேடுதல் நடாத்துவது முடக்கப்பட்டுள்ளது. எனினும் இரகசியமாக ஆட்களைப் கடத்தி சித்திரவதை செய்கிறது தொடர்கிறது. அதனால் பாதிப்புற்றோர் நாட்டை விட்டு செல்ல நேர்ந்தது. தற்சமயம் அவர்கள் LTTE ஆதரவாளர்களையும் அரசியல் செயற்பாட்டாளர்களையும் அல்லது LTTE யின் ஆளணியின் அடிமட்டத்தில் இருந்தவர்களையும் பலோத்காரமாக சிறுவயதில் ஆட்சேர்க்கப்பட்டவர்களையும் இலக்காக்குகின்றனர். இவ்வகையானோர் குறைந்த அளவிலேயே இராணுவ ரீதியான அச்சுறுத்தலாக இருப்பவர்கள் ஆவர்.

பொதுவாக யோசப் முகாமில் விசாரணைகள்நடத்தப்படும் போது வன்முறையும் அச்சுறுத்தலையும் பயன்படுத்துவது பரந்த அளவில் இருந்தது. பல சாட்சிகள் இதனை விபரிக்கையில் எல்லோரும் தம்மைச் சுட்டுக் கொண்டு விடுவார்கள் என்ற அச்சத்துடன் தாம் இருந்ததாகவும் மீண்டும் மீண்டும் தம்முடன் ஒத்துழைக்கும் படி இரானுவம் எச்சரித்த வண்ணம் இருந்ததாகவும் கூறினர். இது முறைசார்ந்த விசாரணைகளின் பொழுதும் இராணுவத்தினுடன் சேர்ந்து செயற்பட்டுக் கொண்டிருந்த LTTE உளவாளிகளிடம் இருந்தும் இவ்வாறான நிலை இருந்தது.

விசாரணைகள் நடத்தும் வழிமுறைகளும் அவற்றின் தீரிரமும் பல்வேறு வகைப்பட்டதாக இருந்தது விசாரணையாளர்கள் நேரடியாகக் கேள்வி கேட்பட்டதற்கு பதிலாக வாக்கியங்களைக் கூறிவிட்டு விசாரிக்கப்படுவர் அதனை உறுதிப்படுத்த வேண்டும் என எதிர்ப்பார்த்தனர் அவ்வாறு செய்ததன்நோக்கம் என்ன வென்று தெரியவில்லை எனினும் முன்வைக்கப்பட்ட வாக்கியங்களின் திரட்டு விசாரணையாளர்கள் கவனம் செலுத்திய மைய ப் பொருளுக்கு சுட்டியாக உள்ளது உதாரணமாக.

- ஒருவருடைய வாழ்க்கை வரலாறு அதனை உறுதிப்படுத்திக் கொள்ள தேவைப்படும் தகவல்கள் அவ்வமையம் எவ்வாறு இயக்கத்தில் இணைந்தார், LTTE யுடன் எவ்வாறு தொடர்பு இருந்தது, அவ்விடத்தில் குடும்பத்தினதும் நண்பர்களின் பங்களிப்பு எவ்வாறு இருந்தன போன்றன தடுத்து வைக்கப்பட்டிருந்த பலருக்கு LTTE யின்கட்டமைப்பில் உயர்நிலைகளில் கூடப்பிறந்தவர்கள், ஒன்றுவிட்ட சகோதரர்கள் மாமா மாமிமார் போன்ற உறவினர்கள் இருந்துள்ளனரா என்பதும், வேறு சில சந்தர்ப்பங்களில் ஏற்கனவே கைதாகி இராணுவத்தினருடன் வேலை செய்யும் முன்னால் ஆளணியினர், இது யோசப் முகாமில் இருந்து ஆளணி மாத்திரமன்றி கருணாவினால் நியமிக்கப்பட்டவர்கள் உட்பட.

- புகைப்படங்கள் மூலம் LTTE யின் ஆளணி அல்லது தலைமைத்துவத்துடன் சில சாட்சிகள் சரணடையும் பொழுதே அல்லது தடுப்பு முகாம்களிலோ அல்லது இடம் பெயர்ந்த முகாமில் அல்லது யோசப் முகாமில் இருக்கும் போது கூட அடையாளம் காணப்பட்டவா் ஆவா் ( ஒருவா் சாட்சியளிக்கையில் ஒருவழி கண்ணாடிகள் கூடப் பாவிக்கப்பட்டது என்று சொல்லப்பட்டது) இம் முயற்சிகளின் பொழுது இன்னும் உயிருடன் இருப்பவா்கள் யாா் என்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. பிணங்களின் படங்கள் காட்டப்பட்டு அடையாளம் காணச் சொல்லப்பட்டது

- ஆயுதங்கள் எவ்வாறு எடுத்துச்சொல்லப்பட்டது. என்பது தொடா்பாடல் கருவிகள் ஆவணங்கள்/ பதிவுகள் அங்கு வைக்கப்பட்டுள்ளன என்பது பற்றியும் விசாரிக்கப்பட்டது. யுத்தம் முடிவடைந்ததன் பின் யோசப் முகாமில் தடுத்து வைத்திருந்த பலா் ஆயதங்கள் புதைந்ததைத் திருத்த இடங்களை அடையாளம் காண்பதற்காக முரண்பாடு நடைபெற்ற இடத்திற்கு திரும்ப அழைத்துச் செல்லப்பட்டடுள்ளனா். ஒரு சிலா் சித்திரவதையில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக பொய் உரைத்துள்ளனா். அதன் விளைவாக வேறு வகையில் அதாவது ஒரு குறிப்பிட்ட இடத்தில் அயுதங்க கிடங்கு இருக்கு என்று கூட்டிச் செல்ல அங்கு அது இல்லை என்னும் போது துன்புறுத்துதலுக்கு ஆளாகுதல் அண்மையாண்டுகளில் ஒழித்து வைக்கப்பட்டிருக்கும் UXO தற்கொலை அங்கிகள், பெல்ட்டுகள், நிலக்கண்ணி வெடிகள் போன்ற “LTTE யை மீண்டும் ஆரம்பிக்க” உதவக் கூடியவற்றை கவனிப்பதில் கூடக் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

- LTTE யாளரின் கட்டமைப்பினதும் தளபாடங்களினதும் விபரங்களையும் அவற்றிக்கு பொறுப்பான வகிப்பாகங்களில் இருந்த LTTE ஆளணியைக் கண்டு கொள்வதில் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.
- ஒழித்து வைக்கப்பட்டிருக்கும் தங்கம் காசு இருக்கும் இடத்தைக் கண்டப்பிடிப்பதற்கான விபரம்.

- LTTE யினை மீள உயிா்ப்பிக்கும் முயற்சியுடன் தொடா்பான புலம் பெயா்ந்த தமிழா்கள் பற்றிய விபரங்கள்

யுத்ததின் இறுதி நாட்களிலும் யுத்தம் முடிவடைந்த அடுத்த நாட்களில் ஆயுதக் கிடங்குகள் எங்கெங்கு இருக்கின்றன என்பதைக் கண்டறிவதற்கான முயற்சிகளுக்கு கூடக் கவனம் செலுத்தப்பட்டு வந்தமையை வாக்கு மூலங்கள் காட்டுகின்றன. இவ்வறிக்கையுடன் தொடா்பான காலத்தில் அந்தத் தொனிப் பொருளே தொடா்ந்தும் இருந்ததைக் காட்டுகின்றன. இது 2016ம் ஆண்டின் நிகழ்வுகளுக்கு இக்கருத்து பொருத்தமாகும். இக்கூற்று LTTE மீள எழுகின்றது என்று இராணுவம் கூறும் கூற்றுடன் நேரடியாகத் தொடா்புபட்டது. அது LTTE யின் திட்டமிடலோடும் நிதியோடும் தொடா்பானது. இராணுவ மயமாக்கலை தொடா்வதை இது நியாயப்படுத்துகின்றது. தீா்க்கப்படாத காணாமல் போனமை தொடா்பிலும் இராணுவம் மயமாக்கல் தொடா்வது சந்தா்ப்பமாகவும் தமிழ் சமூகத்தினா் ஆா்ப்பாட்டம் செய்து ஆட்சேபனை தெரிவிக்கையில் கைது செய்யப்பட்டு தடுத்து வைத்து விசாரிக்கையில் அச்சம்பவங்களை LTTE எழுச்சி பெறும் நடவடிக்கையுடன் தொடர்பு படுத்தி விசாரிக்கப்படுகின்றது என்பது தெளிவு.

யோசப் முகாமினுள் வைத்து தடுத்து வைக்கப்பட்டவா்களை வெவ்வேறு இடங்களில் வைத்து விசாரிக்கும் போது அநேகமாக நிா்வாணமாகவே இருந்துள்ளனா். விசாரணை செய்யப்படும் அறைகளில் அநேகமானவற்றில் தேவைப்படும் உபகரணங்கள் யாவும் இருந்துள்ளன. அத்துடன் அநேகமாக அங்கு வைத்து விசாரிக்கப்பட்டவா்களின் இரத்தக் கறைகள் இருந்தன.

*“தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒருவர் அந்த அறைக்கு கொண்டு வருமுன்னரே சித்திரவதைக்கு தேவைப்படும் சகல உபகரணங்களும் அவ்வறையில் இருந்தன. அவ்கையான உபகரணங்களில் பின்வருவனவும் அடங்கும். ஒரு குழாயினுள் செலுத்தப்பட்ட முள்ளுக் கம்பிகள், மல வாசலுக்கு செலுத்தப் பயன்படுத்தும் முள்ளுக்கம்பிகள், குழாய்களுடன் சுத்தியல்கள், கை நகங்கள் கால்நகங்களை புடுங்கி எடுக்கப் பயன்படுத்தும் குறடுகள் முதலியன அத்துடன் ஒரு மேசையும் கதிரையும் அவ்வறையில் இருக்கும்*

# MALE WITNESSES DETAINED IN 2014 AND 2009




"They took me down about 10-15 steps. I was put in a cell. They removed my blindfold and the handcuffs. Everything in the room was bare cement; the door had metals bars and metal sheeting. There was a small hole at the top of the door where the guards could peek through. There were no windows and no lights inside. The cell smelled of urine and dirt."

"I walked down about 10-15 steps and was made to turn left inside a cell. I heard the creaking sound of iron gates. Inside the cell a person removed my blindfold. The cell was about small the walls and floor made of cement. The door was made of iron."


**TEN WITNESSES DESCRIBED GOING DOWN STEPS TO UNDERGROUND CELLS.**


75 METERS TO INTERROGATION ROOM
CELL ROOM
UNDERGROUND HOLDING CELLS
TOILET

## MALE WITNESS
## DETAINED IN 2009

"He asked me to sign the document he had written by hand in Sinhala. I saw there was a video camera in front of me; I don't know if it was filming me. I also saw a voice recorder. He ordered the others to take my photo and fingerprints. Another soldier told me to sign on several blank pieces of paper."




INTERROGATION ROOM
CAMERA
ME
DOOR
VOICE RECORDER
DESK

*கைவிலங்குகளும் சங்கிலிகளும் கப்பியும் கயிறும் அறையின் மேற்பகுதியில் இருந்து தொங்க விடுவதற்கு பயன்படுத்தப்படும்''.*

ஆணின் சாட்சி ஒருவர் 2009 *ல்*

*''அவ்வறையில் ஒரு மேசை இருந்தது. இரண்டு கதிரைகள் இருந்தன. இக்கதிரைகளில் இருவர் அமர்ந்திருந்தார்கள். இன்னொருவர் அவர் பக்கத்தில் நின்றார். அவர்கள் யாவரும் சாதாரண உடை அணிந்திருந்தார்கள். அவர்களிடம் ஆயுதம் எதுவும் இருக்கவில்லை. அவர்களில் இரத்தக் கறைகள் தென்பட்டன. அவர்களின் படங்கள் ஏதும் இருக்கவில்லை. ஏதோ ஒன்றால் நிரப்பப்பட்ட குழாய்கள் இருந்தன. மொத்த கம்பிகளும் மரத்தால் செய்யப்பட்ட கொட்டாந் தடிகளும் இருந்தன. அவை கிரிக்கட்டின் விக்கட் ஒன்றின் அளவில் இருக்கும். யன்னல்கள் இருக்கவில்லை. ஆனால் காற்றோட்டத்திற்கான துவாரம் இருந்தது. கதவு பலகையால் செய்யப்பட்டது. என் பின்னால் அது மூடப்பட்டது''.*

ஆணின் சாட்சி ஒருவர் 2016 *ல்*

**பதிவுகளை பாதுகாத்தல்**

தம்மூடாக செல்லும் தடுத்து வைக்கப்பட்டவர்கள் தொடர்பில் பெருமளவு தகவல்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளினால் திரட்டப்பட்டுள்ளது என நியாயமாகக் கருதி கொள்ளலாம். பல விசாரணைகள் ஒப்புதல் வாக்கு மூலத்துடன் முடிவடைந்துள்ளன. தடுத்து வைக்கப்பட்ட ஒரு சிலரிடமிருந்து வெற்றுத்தாள்களில் பலாத்காரமாக ஒப்பம் பெறப்பட்டுள்ளது. அநேக எழுதப்பட்ட அல்லது சிங்களத்தில் தட்டச்சு செய்யப்பட்ட ஆவணங்கள் மீது ஒப்பமிடும்படி பலாத்காரம் பயன்படுத்தப்பட்டுள்ளது. தடுத்து வைக்கப்பட்டவர்கள் தமிழர்கள் ஆகையால் அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்பது அவர்களுக்கு தெரியாது மொழி பெயர்ப்புகள் வழங்கப்படவில்லை. பல சாட்சிகள் தாம் படம் பிடிக்கப்பட்டு கை விரல் அடையாளம் எடுக்கப்பட்டதாக கூறினர். ஒரு சாட்சி வீடியோ ஓடியோ (ஒலி ஒளி) கருவிகள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். விசாரணை செய்யும் அறைக்கு பிறம்பான அறையில் நிர்வாக வழிமுறைகளில் ஈடுபட்டுள்ளனர். அவ்வேளையில் சில சந்தர்ப்பங்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்கள் அடித்து துன்புறுத்தப்பட்டிருந்தனர்.

வருடங்கள் பல கடந்தன. விசாரணையாளர்கள் அனேகமாகக் குறிப்புகளை எழுதுவார்கள் அல்லது சந்தேக நபர் பற்றி ஏற்கனவே உள்ள விபரங்களை கொண்டு வருவார்கள். உதாரணமாக 2011ம் ஆண்டில் இன்னொரு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஒரு சாட்சி சித்திரவதை செய்யப்படுவதை நிறுத்துவதற்காகத் தான் செய்த ஒரு குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளார். அச்சாட்சி பின்னர் யோசப் முகாமில் தடுத்து வைத்திருக்கையில் புதியதொரு விசாரணையாளர் தான் ஏற்கனவே பொய்யாகக் கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலத்தை தெரிந்து அதிலிருந்து தொடர்ந்து விசாரித்தார்கள் அதில் தான் கொடுத்த விபரங்கள் பொய் ஆகையால் தான் முதலில் இருந்து அங்கிகாரமற்ற இடத்தில் கொடுத்த வாக்கு மூலம் இவர்களிடம் பரிமாற்றப்பட்டது என்பது தெரிய வந்தது.

ITJP அவதானித்த இன்னொரு விடயம் யாதெனில் யுத்தம் முடிந்து பலவருடங்கள் செல்ல சிங்கள விசாரணையாளர்கள் தமிழில் பேச பழகியுள்ளார்கள். அவர்களது தமிழ் பொதுவாக சரளமாக இருப்பதில்லை எனினும் அவர்கள் மொழிபெயர்ப்பாளர்களில் அதிக அளவில் தங்கியிருக்கவில்லை.

## சித்திரவதையும் பாலியல் வன்முறையும்

### சித்திரவதையும், கொடூர மனிதாபிமானமற்ற அல்லது கீழ்தரமாக நடத்துதல் அல்லது தண்டித்தல்

இலங்கை பாதுகாப்பு படையினர் சித்திரவதையைப் பயன்படுத்துவது என்பது ITJP யினராலும் வேறு ஸ்தாபனங்களினாலும் நன்கு ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. தடுத்து வைக்கப்பட்டிருக்கும்

ஆண்களும் பெண்களும் பாலியல் வன்முறைக்கு பாதுகாப்பு படையினரின் சிரேஸ்ட உறுப்பினர்கள் உட்பட ஏனைய பாதுகாப்பு உத்தியோகஸ்தர்களால் பாலியல் ரீதியில் துன்புறுத்தப்படுகின்றனர் என்ற குற்றச்சாட்டுகளை உறுதிப்படுத்தும் வகையிலான சாட்சியங்களை யோசப் முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்கள் கொடுத்த வாக்கு மூலத்திலிருந்து கிடைத்துள்ளது. இவ் ஆய்விற்கு தகவல்களை வழங்கிய 42 சாட்சிகளை (35 ஆண்கள் ஏனையோர் பெண்கள்) யோசப் முகாமில் நடைபெற்ற சித்திரவதைகள் பற்றிய தெளிவான விபரங்களை வழங்கியுள்ளனர். இவ்விபரங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட தருணங்களில் வழங்கப்பட்டுள்ளன. யோசப் முகாமில் வைத்து சித்திரவதைக் குள்ளாக்கப்படாதவர்கள் வேறு தடுப்பு தடுப்பு நிலையங்களில் வைத்து சித்திர வதை செய்யப்பட்டுள்ளனர். இவ்வாய்விற்கு சாட்சியமளித்தவர்களுள் பலர் பல தடவைகள் கற்பழிக்கப்பட்டோ, பாலியல் ரீதியான சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டோ அல்லது வேறு வகையிலான பாலியல் வன்முறைக் குள்ளாக்கப்பட்டுள்ளனர்.

மேலே குறிப்பிடப்பட்டவகையில் தகவல்களைச் சேகரிக்க யோசப் முகாமில் விசாரணைகளின் போது சித்திரவதை கிரமமாக பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. அது பின்வரும் தேவைகளுக்காகவும் சித்திரவதை பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

- LTTE ஆளணிமீது தகவல்களைத் கொடுக்கத் தவறியதற்காகவும் அவ்வியக்கத்தில் அங்கத்துவம் வகித்ததற்காக தண்டிப்பதற்கும்
- காணாமல் போன ஆட்களைத் தேடும் முயற்சிகளிலோ
- காணிகளைத் திரும்பப் பெறும் முயற்சிகளில் ஈடுபட்டு சட்ட பூர்வ பிரச்சாரங்கள் உட்பட ஆர்ப்பாட்டங்களில் பங்கு பற்றுவதன் மூலம் LTTE யினரை உயிற்பிக்க முயற்சிப்பதற்கு தண்டனை வழங்குவதற்குகாக முதலியன

சித்திரவதைக்கு உள்ளக்கப்படுவதற்கு மாத்திரமன்றி தடுத்து வைக்கப்பட்டவர்கள் மீது சிறு நீர் கழித்தல், நிர்வாணமாக நிற்கச் செய்தல், ஏளனப்படுத்துதல் போன்ற கீழ்த்தரமான செயற்பாடுகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். சித்திரவதை செய்பவர்களை வழமையாக ''தமிழ் நாய்கள்'' என்றோ ''தமிழ் அடிமைகள்'' என்றோ குறிப்பிட்டு கீழ்த்தரமான மொழி பயன்படுத்தி தூசிப்பதும் உண்டு.

சில சந்தர்ப்பங்களில் தடுத்து வைக்கப்பபட்டிருந்தவர்கள் சித்திரவதைக்குள்ளாகி அவஸ்தைப் படுவதை மற்றவர்களைப் பார்க்கச் செய்துள்ளனர்.

*''ஒருவருடைய தலையை பெற்றோல் பூசப்பட்ட பிலாஸ்ரிக் உரையால் மூடுவதைக் கண்டேன் அவர் மூச்சுத் திணறினார். மின்சார கம்பிகளால் சவுக்கடி கொடுக்கப்பட்டு முதலில் இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. மூச்சுத்திணர வைப்பதற்காக அவரின் தலை நீர்த்தாங்கியில் மூழ்கச் செய்யப்பட்டது''.*

ஒரு ஆண்சாட்சி 2016 ல்

யோசப் முகாமில் தடுத்து வைக்கப்பட்ட காலங்களில் வழமையாக சில நாட்கள் முதல் 21 மாதங்கள் வரை தொடரலாம். அக்காலங்களில் தடுத்து வைக்கப்பட்டவர்கள் திரும்ப திரும்ப சித்திரவதைக்கு உள்ளாகலாம். ITJP யனால் ஆவணப்படுத்தப்பட்ட வேறு இடங்களில் பாதுகாப்புப் படையினர் எவ்வாறு சித்திரவதை செய்தார்களோ அதே முறையில் தான் இவர்களும் சித்திரவதை செய்யப்பட்டனர். ஆனால் யோசப் முகாமில் சித்திரவதைக் குள்ளாகி உயிர் தப்பியவர்கள் இங்கு மிகவும் கொடூரமாகத் தாக்கப்படுவார்கள் என்றும் அதன் விளைவாக மயக்கம் ஏற்படுவதாகவும் கூறியுள்ளார். ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு சாட்சியின் காலம் (collar) எலும்பு உடைந்ததாகவும் இன்னொரு சந்தர்ப்பத்தில் தலையில் ஏற்பட்ட காயத்தினால் நெடு நாள் நிலைக்கக் கூடிய விளைவுகள் ஏற்பட்டுள்ளன.

சித்திரவதை செய்யும் முறைகளில் பலாக்கான என்னும் குதிக்காலுக்கு அடித்தல், மூச்சுத்திணறச் செய்தல் (இது பொதுவாக பெற்றோல் தோய்க்கப்பட்ட பிலாஸ்ரிக் பையுக்குள் தலையை திணித்தலும், மிளகாய்த் தூள் பிரட்டப்பட்ட பைக்களுள் தலையைத் திணித்தலும்)கால்களால் உதைத்தல், கன்னத்தில் அறைதல், மரம் பொல்லுகளால் பிளாஸ்ரிக் குழாய்களால் அடித்தல், உலோகக் கம்பிகள் கேபிள்களைக் கொண்டு கசையடி வழங்கல், அறையில் மேல்பகுதியில் உள்ள கொழுக்கிகளில் அல்லது கம்பிகளில் தொங்கவிடுதல்

அல்லது நீரைப் பயன்படுத்தி சித்திரவதை செய்தல் இவ்வகையான சித்திரவதைகள் அனேகமாக பாதிப்புற்றவர்கள் கட்டப்பட்ட நிலையிலே நடைபெறுவது உண்டு நெருப்பில் காய்ச்சப்பட்ட உலோகக்கம்பிகளால் சுடுவதும் சிகரட் அல்லது சிகரட்கொழுத்தியை பயன்படுத்தி எரிகாயம் ஏற்படுத்துவது நகங்களை குறடுகள் கொண்டு இழுத்தெடுத்தல் இருகாதுகளுக்கும் இரத்தம் வரும் வரை அறைதல்.

இருபத்திமூன்று பேர் (4 பெண்குளும் 19 ஆண்களும்) தங்களது அந்தரங்க உறுப்புக்களையும் மார்புகளையும் தொடர்புபடுத்தி எவ்வாறு சித்திரவதை செய்துள்ளனர் என விபரித்துள்ளனர். இவற்றை அடிப்பதும் தீக்காயம் ஏற்படுத்துவதும் விசாரணையின் போது அடிக்கடி நடப்பதுண்டு வேதனை ஏற்படுத்துவதற்கும் அவமானப்படுத்துவதற்கும் பின்பற்றப் படும் வழிமுறைகளில் இவையும் ஒன்று.

பல ஆண் சாட்சிகள் தமது மலவாசலுக்குள் குழாய்களையும் உலோகக் கம்பிகளையும் கிரிக்கெட் பொருள்களையும் திணித்து சித்திரவதை செய்யப்பட்டமை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளார்.

*''இரு வேறு சந்தர்ப்பங்களில் தான் சங்கிலியால் தொங்கவிடப்பட்டிருக்கையில் குழாய்கள் மல வாசலுக்குள் திணிக்கப்பட்டன''.*

ஒரு ஆண் சாட்சி 2016 *ல்*

*''முதல் மூன்று மாதகாலமாக சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டோம். எனது முகத்தில் குத்தினார்கள், உலோகக் கம்பியால் அடித்தார்கள், மரப்பொல்லினால் குதியில் அடித்தார்கள், மலவாசலில் ஒரு போத்தலைத் திணித்தார்கள், என்மீது மின்சாரம் பாய்ச்சினார்கள். அனேகமாக ஒவ்வொரு நாளும் என்னை பாலியல் ரீதியாக துன்புறுத்தினார்கள். உயர் பதவியில் இருந்த இராணுவ உத்தியோகஸ்தர்கள் கூட மாறி மாறி பாலியல் ரீதியாக துன்புறுத்தி பல நாட்களிற்கு கும்பலாக கற்பழித்தனர்''.*

ஒரு ஆண் சாட்சி 2009 *ல்*

ஒரு சந்தர்ப்பத்தில் பாதிப்புற்றவரின் மலவாசலுக்கு ஒரு குழாயில் செலுத்தப்பட்டு முள்ளுக் கம்பியைத் திணித்தார்கள் குழாயை வெளியே எடுத்தப் பின் குதத்தில் காயம் வரும் வகையில் முள்ளுக்கம்பியை அங்கும் இங்கும் அசைத்தார்கள் இந்த மனிதன் இவ்வாறு சித்திரவதை செய்யப்பட்டதை அவருக்கு 15 வயதாக இருக்கையில் நடைபெற்ற LTTE தாக்குதல் ஒன்றின் அவரும் கலந்து கொண்டார் என்பதை ஒத்துக் கொள்ளச் செய்ய இச்சம்பவம் வேறு ஒருவராக பிழையாக அடையாளம் கண்டமையால் ஏற்பட்டுள்ளது.

*''என்னை உள்ளே தள்ளினார்கள் மேசை மீது குப்புற இருக்கச் சொன்னார்கள் அந்த மேசையின் நாலு கால்களும் மேல் நோக்கிப் பார்த்தப்படி இருந்தது எனது கட்டைக் காற்சட்டையைக் கழற்றினார்கள். எனது கைகளையும் கால்களையும் மேசையின் நான்கு கால்களிலும் கட்டினார்கள் ஒரு சிப்பாய் ஒரு கையில் ஒரு குழாயும் மற்றைய கையில் ஒரு சுருள் முள்ளுக்கம்பியும் கொண்டு வந்தார். தாங்கள் சொல்வதை நாங்கள் ஒத்துக் கொள்ள வில்லை என்றால் ஓத்துக் கொள்ளச் செய்வதாகக் கூறினார்கள். இருவர் எனது குண்டியைப் பிடித்தார்கள் ஒரு குழாயைத் திணிப்பதை உணர்ந்தேன். மிகவும் வேதனையாக இருந்தது. நான் அழுது கொண்டு இருந்தேன். ஒரு நபர் எனது தலையை நிமிர்த்திக் கேட்டார் நான் தானே அந்த நபர் என்று தலையை அசைத்தப்படி இல்லை இல்லை இல்லை என்றேன். அப்போது அவர் குழாயை வெளியே இழுத்தெடுத்தார் எனக்கு கடும் வேதனை ஏற்பட்டு மயக்கம் உற்றேன் அப்போது நான் உணரவில்லை குழாயில் இருந்து முள்ளுக் கம்பியால் ஏற்பட்டதென்று. முள்ளுக்கம்பியால் என்னை அடிக்கத் தான் கொண்டுவந்தார்கள் என்றே நினைத்தேன். எனது மலக்குதத்தில் ஏதோ அழுத்துவதை உணர்ந்தேன் அப்போது அது என்ன வென்று தெரியாது பின்னர்தான் என்ன வென்று உணர்ந்தேன். எனக்கு மயக்கம் தெளிந்ததும் ஒரு அறையின் நிலத்தில் கிடப்பதை உணர்ந்தேன். நிலத்தில் எங்கும் இரத்தம் இருந்தது என்னால் அசைய முடியவில்லை மறு நாள் அசைய முடிந்தது எனது மல வாசலைத் தொட்டுப் பார்த்தேன் அதில் இருந்து மாமிசத் துண்டுகள் தொங்கிக் கொண்டிருந்தன அவை கறிக் கோழி இறைச்சி போல் தென்பட்டன''.*

ஒரு ஆண் சாட்சி 2009 *ல்*



"One person came to my cell in the night, I don't remember exactly what time and I don't know what he was wearing because it was dark, but he raped me from behind. He put his penis in my anus and he raped me for about five minutes, I think, I was lying face down on the floor, he held my hands tight and pressed his body on top of me. I was screaming because it was painful. After he finished with ejaculation – I could feel it inside me, he made me take his penis into my mouth. He didn't speak to me, he smelled of cigarette smoke but not of alcohol although I think he must have been drunk because he was so aggressive."

**MALE WITNESS (2015)**





"During my two/three weeks in detention I was subjected to 6 or 7 gang rape sessions. I was naked almost all the time. Two or three different men came to my room each time. They would rotate. They did not wear uniforms. Sometimes during the interrogations they would wear army uniforms - light and dark green mix - but not during the rapes. After a couple of days they had moved me to an even smaller room where I would sleep. They raped me in that room by penetrating my vagina with their penises. They also penetrated the rear passageway, my anus, with their penises. The room is very small so only one man could fit in it at a time. They used to take turns to rape me, one after the other. Usually each man would rape me at least once. Usually one would have his penis in my mouth while the other one raped me with his penis below. One day while interrogating me they also put a baton into my vagina."

**FEMALE WITNESS (2013)**








## DETAINED IN 2011




"They tied me to the pillar by my hand and legs. They punched me in the face and my nose started bleeding. After this they released me from the pillar and I fell on the ground and here they stamped on me with their boots. While I was in this room another man was tied to a pillar. He was facing it and his back exposed. They kicked him and beat him with sticks and rods."

"I was tied upside down and they put a plastic bottle in front of my face. The bottle emanated fumes and caused a burning sensation in my throat and I started coughing and my eyes and head hurt. They also had a bag soaked in petrol that they tied around my head while I was upside down. It became unbearable and my body started shaking. Then they took me down and said, 'Now you will start talking'".

**ANOTHER DETAINEE ALSO DESCRIBED BEING TIED TO PILLARS IN JOSEPH CAMP.**



**பாலியல் வன்முறை**

யோசப் முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்கள் சித்திரவதை செய்யப்பட்டது முன்கூட்டியே அவ்வாறு செய்யவென திட்டமிட்டு வடிவமைக்கப்பட்டது. அதில் வேதனையைப் உருவாக்கி மனச் சஞ்சலத்தை ஏற்படுத்துவது நோக்கமாக இருந்தது. அந்த வழிமுறைகளுள் பாலியல் வன் முறையும் அடங்குகின்றது. அவ்வாறு செய்வதன் நோக்கம் வெறுமனே உடல் ரீதியாகவோ மனரீதியாகவோ வேதனை ஏற்படுத்துவது, அதை இழிவுபடுத்தி வெட்கம் ஏற்படுத்தி சாட்சியின் மனதை சீர் குலையச் செய்து தான் பெறுமதியற்றவன் ஆக்கப்பட்டேன் என்று எண்ணச் செய்வது நோக்கமாக இருந்தது.

பாலியல் சித்திரவதை என்னும் போது ஆண்களும் பெண்களும் கற்பழிக்கப்படுவது உட்பட தடிகள் கிரிக்கெட் பொல்லுகள், கொக்கோ கோலப் போத்தல்கள் போன்றவற்றை பெண் உறுப்பில் அல்லது மல வாசலில் செலுத்துவது வாயால் இன்னொருவரது உறுப்பை உணர்ச்சி வர செய்தல் ஆண் உறுப்பை நெரித்தலும் கடித்தலும் பெண்களின் மார்பகங்களையும் அந்தரங்க உறுப்புக்களை விராண்டுவது சிகரெட்டால் சுடுவது முதலியன அடங்கும். இவையெல்லாம் வெறுமனே உடல் ரீதியாக வேதனை ஏற்படுத்துவது அல்ல மனரீதியாக சீரழிப்பது நோக்கமாக இருந்தது.

18 ஆண்களும் 6 பெண் சாட்சிகளும் தாம் தடுத்து வைத்திருந்த காலத்தில் பல தடவைகள் கற்பழிக்கப்பட்டதாகவும் பாலியல் ரீதியில் துன்புறுத்தப்பட்டதாகவும் கூறியுள்ளனர் இவ்வகையான செயல்கள் 2007 முதல் 2016 டிசம்பர் வரை நடைபெற்றதாக பதிவுகள் உள்ளன.

தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களில் பலர் ஆண்களும் பெண்களும் பல சந்தர்ப்பங்களில் கற்பழிக்கப்பட்டும் துஸ்பிரயோகிக்கப்பட்டும் உள்ளார்கள். அனேக சந்தர்ப்பங்களில் கும்பலாக கற்பழிக்கப்பட்டனர். யுத்தத்தின் பின் யோசப் முகாமில் தடுத்து வைக்கப்பட்ட 60 தகவல் வழங்கியோர்களில் ஒருவரின் கூற்றுப் படி ஒரு பெண் கதிரையில் கட்டப்பட்டிருந்ததை தான் கண்டதாகவும் அப்பெண் பல்வகைப்பட்ட குற்றம் புரிபவர்களால் கற்பழிக்கப்பட்டும் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்படுவதையும் தான் கண்டதாகவும் அப்பெண்ணின் மார்புகள் கடிக்கப்பட்டிருந்ததாகவும் உடம்பு பூராகவும் கீறல்கள் காயங்கள் இருந்ததாக விபரித்துள்ளார் தமக்கு அளிக்கப்பட்ட பொறுப்புக்களில் ஒரு பகுதி முன்னால் போராளிகளை அடையாளம் காட்டிக் கொடுப்பது மாத்திரமன்றி இராணுவத்தினர் குடித்துவிட்ட வந்து பின் தாங்கள் கற்பழிக்க அழகான பெண்களை அடையாளம் கண்டு கொடுப்பதும் உட்படும். தங்களுக்கு பேசிக் கொண்டு இருக்கும் போது ஒவ்வொறு வரும் தாம் ஆகக் குறைந்தது 15 தமிழ் பெண்களைக் கற்பழித்துள்ளதாக கூறிக் கொள்வதை தான் செவிமடுத்ததாக கூறினார்.

பாலியல் துன்புறுத்தல்கள் தடுத்து வைக்கப்பட்ட அறைகளிலும் விசாரணை நடத்தப்பட்ட அறைகளிலும் நடந்ததை இவ்வகையான செயல்கள் புரிந்தவர்கள் அனேகமாக விசாரணை உத்தியோகஸ்தர் அல்லது காவல் கடமையில் இருந்தவர்கள் சில வேலைகளில் இருளாக இருந்ததால் யார் குற்றம் புரிந்தார்கள் என்று சொல்ல முடியாமல் இருக்கும்.

ஒரு சிலருக்கு விசாரணைகள் முடிவடைந்திருக்கும். ஆனால் சித்திரவதையும் பாலியல் வன்முறையும் தொடரும். முன்னர் குறித்துக் கொண்டவகையில் தடுத்து வைக்கப்பட்ட ஆண்கள் வேறாகவும் பெண்கள் வேறாகவும் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இராணுவப் புலனாய்வுப் பிரிவின் கட்டிடவசதிகள் தொடர்பான படத்திற்கு அமைய ஆண்களை விசாரிக்கும் இடமும் பெண்களை விசாரிக்கும் இடமும் அருகருகே இருக்கின்றன. பல சாட்சிகள் பெண்கள் குழறுவது தமக்கு கேட்டதாகக் கூறியுள்ளனர். ஒருவருக்கு ஆழமாக கவலை ஏற்படுத்திய காட்சி ஒன்றை பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்ததாக கூறியுள்ளார்.

*''காலையின் அறையில் இருந்து வெளியே செல்லும் போது எனக்கு நடப்பது கடினமாக இருந்தது. பெண்கள் இருந்த அறையின் கதவு சற்று திறந்த நிலையில் இருந்தது ஒரு பெண் நிலத்தில் மேலே பார்த்தப்படி கண்டேன் அவ முழுமையாக நிர்வாணமாக இருந்தா ஒரு சோடாப் போத்தல் அவலின் பெண் உறுப்பினுள் செலுத்தப்பட்டிருந்ததனைக் கண்டேன் கைகளும் கால்களும் விரித்தப்படி இருந்தன அங்கே இருந்த வேறு இரு பெண்*

*பிள்ளைகளைப் பார்க்க கூடிய அளவுக்கு கதவு திறந்து இருக்கவில்லை அவர்கள் அப்பெண்கள் உயிருடன் இருந்தார்களா இறந்து கிடந்தார்களா என்று என்னால் சொல்ல முடியாது''.*

ஒரு ஆண் சாட்சி 2009*ல்*

இன்னுமொரு சம்பவத்தில் சில சிப்பாய்கள் தடுப்பில் இருந்த பெண்ணை கற்பழிக்கும் படி தடுப்பில் இருந்த ஆணை வற்பறுத்தியுள்ளார்.

*''அப்பெண்ணையும் என்னையும் ஆடைகளைக்களையும் படி வறுப்புறுத்தினார்கள். நான் மறுத்ததால் எனக்கு அடித்தார்கள், உதைத்தார்கள். சிப்பாய்கள் எமது ஆடைகளைக் களைத்தார்கள். அப்பெண் துடித்தாள், குழறினாள், தன்னை விட்டு விடும் படி கெஞ்சினாள். அவளின் உடம்பைத் தொடும்படி வற்புறத்தினார்கள். எம்மைப் பார்த்து சிரித்தப்படி படம் எடுத்தார்கள். அவர்களில் இருவர் அப் பெண்ணின் கையைப் பிடித்துக் கொண்டு இருந்தனர். என்னைப் போய் அவளைக் கட்டிப் பிடித்து கற்பழிக்கும் படி கேட்டார்கள். அச் சொல்லை அவர் கொச்சைத் தமிழில் கூறினார். நான் மறுக்க கடுமையாகத் தாக்கப்பட்டேன். ஏன் கண் முன்னேயே அப் பெண்ணும் தாக்கப்பட்டாள். அவளின் மூக்கினாலும் வாயினாலும் இரத்தம் வடிந்தது. எனது காதுகளில் இரத்தம் வடிந்தது. நான் அதிக பலவீனமாகவும் வலுவிழந்து என்ன செய்வது என்று அறியாத நிலையில் இருந்தேன். அப் பெண் நிலத்தில் விழுந்து விட்டார். அவர்கள் அவளை இழுத்துச் சென்றனர். என் அறைக்கு கொண்டு சென்றனர். இச் சம்பவம் என் மனதைப் பெருமளவு தாக்கியது. ஒரு தமிழ் பெண் இந்தளவுக்கு துஸ்பிரயோகம் செய்யும் படி என் மீது பலோத்காரம் பிரயோகித்தமை எனக்கு அதிக மன வேதனை ஏற்படுத்தியது. அதை யிட்டு எனக்கு கோபமும் கவலையும் ஏற்படுகின்றது. அவற்றிற்கு என்னை நானே குற்றம் சாட்டுகின்றேன்''.*

ஒரு ஆண்சாட்சி 2010 ல்

பாலியல் வன்முறைகளினால் தமக்கு ஏற்பட்ட அவமானத்தினாலும் ஆழமான வெட்கத்தினாலும் தங்களுக்கு நடந்தது பற்றிய விபரங்களை வெளிப்படுத்த இயல்பாகவே சாட்சிகளை தயக்கம் காட்டினார். அச்சம்பவங்களை மீட்டுப்பார்ப்பதினால் அக் கோர சம்பவங்கள் மீண்டும் ஏற்படுத்தும் மன உழச்சலுக்கு இதற்காக பரிகாரம் பெற முயற்சிப்பதும் கடினமாகின்றது. மேலும் தாம் அனுபவித்த பாலியல் வன்முறைப் பற்றி ஏனையோருக்கு தெரிய வந்தால் அவ்வகையான துன்பத்திற்குள்ளானவர்களிற்கு ஏற்படும் வடு அதிகளவில் உள்ளமையால் இச்சம்பவங்கள் பற்றி அவர்கள் விபரிக்கத் தயங்குவதை விளங்கிக் கொள்ளக்கூடியதாக உள்ளது.

**தடுத்து வைக்கப்படுவதுடனும் வடிக்கட்டப்படுவதுடனும் தொடர்புபட்ட லஞ்சம் பெறுதலும் மிரட்டிப் பணம் பறித்தலும்:**

ஆட்களைத் தடுத்து வைத்தலும் அவர்களை மிரட்டிப் பணம் பறிப்பதும் அவர்களை விடுவித்து நாட்டுக்கு வெளியே அனுப்பவது தொடர்பிலான செயற்பாடுகள் மூலம் பணம் சேகரிக்கும் வழிமுறைகள் பற்றிய சாட்சியங்கலும் கிடைத்துள்ளன. இது சில உத்தியோகதர்களுக்கு தாங்கள் வகிக்கும் பதவிற்கு மேலதிகமாக “இன்னொரு தொழில் முயற்சி'' யாக மாத்திரமன்றி கனிசமான அளவு வருமானத்தை ஒரு சில அலுவலர்கள் பெற்றுக்கொள்ள மாற்று வழியாக அமைந்தது. ITJP யின் சாட்சிகள் தொகுப்பில் உள்ள 34 சாட்சிகள் யோசப் முகாமிலிருந்து விடுவிக்கப்படுவதற்கான லஞ்சம் கொடுத்துள்ளனர். இவ்வகையான சந்தர்ப்பங்கள் அனேகமானவை பற்றித் தகவல்கள் நடுவர்கள் மூலம் இராணுவத்திற்கு பணம் செலுத்திய உறவினர்கள் மூலம் தெரிய வந்துள்ளது. பல சம்பவங்களில் நடுவராக செயற்பட்டது பெயர் தெரியாத புலனாய்வு அலுவலர்கள் என்றும அல்லது நடுவர்களாகச் செயற்பட்ட முஸ்லிம் நபர்கள் என்றும் வேறு சிலருக்கு யார் அவ்வாறு செயற்பட்டார் என்று தெரியாது என்றும, ஒன்பது பேருடைய விவகாரத்தில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (EPDP) கொடுக்கல் வாங்கலுக்கு வசதி செய்ததாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. பல தருணங்களில் விடுவிக்க உதவிய அதே முகவர்கள் சாட்சிகள் இலங்கையை விட்டு வெளியேறவும் உதவியுள்ளனர்.

தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்கள் எவ்வாறு காணாமல் போயுள்ளார்கள் என்பது பற்றி பாதுகாப்பு படையினர் என்ன விளக்கம் கொடுத்தார்களோ என்பது தெளிவில்லை. இது

விசேடமாக தடுத்து வைக்கப்பட்டிருந்தது பற்றிய பதிவுகள் இருககையில் எவ்வாறு விளக்கம் கொடுக்கப்பட்டிருக்குமோ தெளிவில்லை. ஆட்கள் காணாமல் போனமைகள் பற்றிய பொதுவான நோக்குக்கமைய அவ்வாறான சம்பவங்களிற்கு பாதுகாப்புப் படையினரின் பொறுப்பு எனக் கருதப்படுவதற்கு ஏற்ப குறித்த சம்பவங்கள் தொடர்பில் உள்ளக விசாரணை ஏதும் ஆரம்பித்து இருக்கக்கூடிய வாய்ப்பு ஏதும் இல்லை. அது அப்படி இருக்க கிட்டத்தட்ட அவ்வாறான 30 சந்தர்ப்பங்களில் சாட்சிகளின் குடும்பத்தவர்களிடம் பாதுகாப்புப் படை உறுப்பினர்கள் சென்று தடுப்பிலிருந்த காணாமல் போனவர் பற்றி விசாரணை செய்துள்ளனர். அனேகர் (உறவினர்) அச்சுறுத்தப்பட்டதாகவும் பல சந்தர்ப்பங்களில் உடல் ரீதியாக துஸ்பிரயோகம் சித்திரவதையுட்பட செய்யப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. இவ்வாறு செயற்பட்டமை பாதுகாப்புக் கட்டமைப்பினுள் இருக்கும் பல்வேறுபட்டவர்கள் வழங்கிய ஒத்துழைப்பை மூடிமறைப்பதற்காவோஅல்லது உண்மையில் பதிவிலிருந்த ஒருவர் தப்பியோடுவதைக் கண்டறியும் முயற்சியோ என்பது தெளிவில்லை எது எவ்வாருயினும் இலங்கை பாதுகாப்புத்துறையில் மூடிமறைக்கப்பட்டுள்ள உள்விபரங்கள் தொடர்பான வெளிதோற்ற அறிகுறியாகும். எனினும் தடுத்து வைக்கப்பட்ட இடத்தில் நடைபெற்ற சித்திரவதைகள் பற்றி குடும்பத்தினர் அறிந்திருந்தால் அது பற்றி அவர்கள் மௌனம் காக்கச் செய்யும் முயற்சியாகவும் அது அமையலாம்.

## குற்றம் புரிந்தவர்கள்

### தனித்தனியே அவர்களை அடையாளம் காணல்

யோசப் முகாமிலிருந்து செயற்பட்டதாகக் கூறப்படும் 36 இராணுவப் புலனாய்வு உத்தியோகத்தர்களுடைய பெயர்கள் ஐவுதீ யிடம் உள்ளது. அத்துடன் அம்முகாமை மையமாகக் கொண்டு செயற்படும் 40 தகவல்கள் வழங்குபவர்களுடைய பெயர்களும் உள்ளன. அத்துடன் இவர்களோடு தொடர்புபட்ட 25 புகைப்படங்களும் பல தொலைப்பேசி இலக்கங்களும் இவர்களின் சில பேருடைய தரா தரங்கள், சேவை இலக்கங்கள், சேவை வரலாறு முதலிய விபரங்களும் உள்ளன.

குறித்த புகைப்படங்கள் வேறு 24 புகைப்படங்களுடன் கலக்கப்பட்டு யோசப் முகமில் தடுத்து வைக்கபட்டவர்களாக கருதப்படும் அல்லது பரவலாக வவுனியாப் பகுதியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சாட்சிகளிடம் காட்டப்பட்டன. அப்படங்களில் இருந்து பலரை சாட்சிகள் அடையாளம் கண்டு தம்மைச் சித்திரவதை செய்தவர்களின் படங்களை சுட்டிக்காட்டியுள்ளனர் அவற்றுள் சில வருமாறு

(அ) யோசப் முகாமில் வைத்து தன்னைச் சித்திரவதை செய்த இராணுவ மேஜர் இவர் என்று அடையாளம் கண்ட பலருள் இச்சாட்சி ஒருவர்:

*''சித்திரவதை செய்யும் அறையில் பல தடவைகள் கண்டேன் அப்போது அவர் இராணுவ சீருடையிலிருந்தாரா சாதாரண உடையில் இருந்தாரா என்று ஞாபகம் இல்லை. அவர் தன்னுடைய கை துப்பாக்கியை எடுத்து சுடுவதற்கு தயார் நிலையில் வைத்து அத்துப்பாக்கியினை நெற்றியில் கண்கள் இரண்டுக்கும் மத்தியில் வைத்தார். இவர் இவ்வாறு இரண்டு மூன்று தடவைகள் வேறு நாட்களில் செய்துள்ளார்''.*

ஒரு ஆண் சாட்சி 2010 ல்


யுத்தத்தின் பின் உரிய காலங்களில் குறித்த மேஜர் ஜோசப் முகாமில் இருந்துள்ளார் என்பதை சாட்சிகள் உறுதிப்படுத்தியுள்ளனர். ஒரு பெண் சாட்சி சாட்சியமளிக்கையில் தன்னை விசாரிக்கும் குழுவினருடன் குறித்த மேஜர் இருந்நிருக்கின்றார். அத்துடன் தனது தலையில் பெற்றோல் தோய்ந்த பையைக் கட்டியபோது அவரும் சமூகமாக இருந்தார்.

(ஆ) 2009ம் ஆண்டு யோசப் முகாமில் கடமை புரிந்து வந்த இன்னுமொரு மேஜர் தன்னைக் கற்பழித்தவர்களில் இவரும் ஒருவர் என ஒரு பெண் சாட்சி அடையாளம் கண்டுள்ளார். ஐவுதீ யிடம் 2015ம் ஆண்டு என்ன பதவி வகித்தார் என்பதுடன் முழுச் சேவை கால வரலாறும் உள்ளது. உண்மையில் இவர் யோசப் முகாமில் இருந்தார் என்பதை வேறு இரு சாட்சிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

## MALE WITNESS
## DETAINED IN 2010 – 11




"These were underground cells down about 10-12 steps. There were 15 men kept in each cell. I didn't know any of the other detainees but they were mostly former LTTE members; I could tell just by looking at them. We were not allowed to speak to each other."


15
DETAINEES
METAL RODS
EMBEDDED IN
CEMENT FLOOR
STEPS
UNDERGROUND
HOLDING
CELL

(இ) யுத்தம் முடிவடைவதற்கு முன்னரான காலத்தில் வேறு முகாமில் வைத்து பல தடவைகள் கற்பழித்ததை யோசப் முகாமில் பல இராணுவ அலுவலர்களை வேறு ஒரு பெண் அடையாளம் காட்டியுள்ளார். இவ்வகையாக குற்றம் புரிந்ததாகக் காட்டப்படும் நபர்களுள் ITJP பெயர், தரத்துடன் அடையாளம் கண்ட மூத்த அதிகாரி ஒருவர் உள்ளார்.

**பெயர் மூலம் அடையாளம் காணுதல்:**

பாதிப்புற்றோர் அனேகமானோருக்கு தம்மைச் சித்திரவதை செய்தவர்களின் பெயர்கள் தெரியாது எனினும் ITJP குற்றம் புரிந்தவர்களுடைய மேலதிகப் பெயர்கள் தமக்குக் கிடைத்த சாட்சியங்கள் மூலம் சேகரித்துள்ளனர். 32 சம்பவங்களில் சாட்சிகள் இராணுவ விசாரணையாளர்களை அடையாளம் கண்டுள்ளது. பொதுவாக அவர்களின் சீருடையில் இருந்த அப்பெயர்களில் சில வேளைகளில் சேவை மூப்புள்ள அதிகாரிகளும் உள்ளனர்.

*''கட்டளையிடும் அதிகாரிகள் தமது உருவை மறைக்கும் சீருடைகளுடன் அவரைக் கண்டோம் ஆனால் சீருடைகளில்இலச்சினைகள் பதக்கங்களும் தோளில் நட்சத்திரங்களும் இருந்தன. அத்துடன் அவர்களது தோலில்ருந்து மேற்கையில் ஒரு பட்டி இருந்தது''.*

ஒரு ஆண் சாட்சி 2009 ல்

உடல் ரீதியாக சித்திரவதை செய்த பாலியல் ரீதியாகச் சித்திரவதை செய்தவர்கள் அனேகா் காவலாளி முதல் சிரேஸ்ட பதவியில் உள்ளவர்கள் வரை ஆண்களே. விசாரணைகள் நடத்தப்படும் தறுவாயில் சிலவேளைகளில் பெண் பாதுகாப்பு உத்தியோகத்தர் இருந்திருக்கின்றனர். சில சந்தர்ப்பங்களில் சாட்சியங்களுக்கு அடிக்கும்போது பாலியல் ரீதியில் துன்புறுத்தும் போதும் இருந்துள்ளனர். சில சந்தர்ப்பங்களில் சாட்சியங்களிற்கு அடிப்பதிலும் பங்கு கொண்டுள்ளனர்.

நெடுநாட்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த காலத்தில் பல்வேறு சம்பவங்கள் நடைபெற்று உள்ளதால் தம் மீது குற்றம் புரிந்ததை அடையாளம் காண்பதில் குழப்பமான நிலையில் உள்ளனர். பொலிசாருக்கும் இராணுவத்தினருக்குமிடையிலான வேறுபாடு எப்போதும் தெளிவாக இருந்திருக்கவில்லை. சில இராணுவ விசாரணையாளர்கள் சாதாரண உடையில் கடமை புரிவார்கள். வேறு சிலர் சிவிலியன் உடை அணிந்தவர்கள், மொழிப் பெயர்ப்பாளர்களாகவோ எழுதுவினைஞர்களாகவோ பணிபுரிந்துள்ளார்கள்.

*''புதிய அலுவலகர் ஒருவர் சாதாரண உடையில் சமூகமளித்திருந்தார். அவர் நல்ல தமிழ் பேசினார். அவர் ஊஐனு அலுவலகர் என்று நான் நினைத்தேன். ஆனால் வுஐனு யினரோ இராணுவப் புலனாய்வுப் பிரிவினைச் சேர்ந்தவரோ எனக்குத் தெரியாது. நாம் பொதுவாக சாதாரண உடையில் வருபவர்கள் ஊஐனு யினர் என அவர்கள் இருந்திருக்கலாம் அல்லது இல்லாதிருந்திருக்கலாம்''.*

ஒரு ஆண் சாட்சி 2013 ல்

பத்து நிகழ்வுகளில் பொலிசாரின் பெயர்கள் வுஐனு யைச் சேர்ந்தவர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றுள் இரு சந்தர்ப்பங்களில் அவர்கள் TID யினர் அடையாளம் காட்டியதாக சாட்சிகள் கூறுகின்றன. இந்நிகழ்வில் அனேகமானவை அண்மைக்காலத்தில் நடைபெற்றச் சம்பவங்களாகும். அதன் மூலம் பயங்கரவாத தடுப்பு முயற்சிகளுக்கு கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் தென்படுகின்றது. பாதுகாப்புப்படையின் பல்வேறு பிரிவினர்களின் குறிப்பிட்ட மட்டத்திற்கான ஒத்துழைப்பு இருந்தது. ஒத்துழைப்பு எந்தளவிற்கு எழுத்து மூல ஆவணங்கள் மூலமோ கட்டளையிடும் அதிகார மட்டத்துடன் எவ்வளவு தூரம் தொடர்பாக இருந்தது என்பது தற்போதைக்கு தெரியாது உள்ளது. பல சந்தர்ப்பங்களில் சாட்சிகள் இராணுவ தடுப்பு முகாம்களில் இருந்து TID தலைமையகத்தின் கொடூர செயல்களிற்கு பிரபல்யமான 4ம் மாடிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

**தகவல் வழங்கும் தமிழர்**

தகவல் வழங்குவோரைப் பேட்டிக் கண்ட வழங்கப்பட்ட அறிக்கைகள் வழங்கியபோது இலங்கைப் பாதுகாப்புப் படையினருடன் பல்வேறு மட்டத்திலான நம்பிக்கையை பெற்றுள்ளார்கள். இராணுவத்திற்கு உதவும்படி வற்புறுத்தப்பட்டிருந்தார்கள் என்று தெரிய வந்துள்ளது. LTTE யைச் சேர்ந்த தகவல் வழங்குவோர் விசாரணைகள் நடைபெறும்போது

சமூகமாக இருந்துள்ளனர். சில வேளைகளில் முகமூடி அணிந்த நிலையில் இருந்துள்ளனர். வேறு சில சந்தர்ப்பங்களில் விசாரணையாளர்களின் தேவைக்கேற்ற வகையில் இருந்துளள்ளனர். அதாவது தகவல் வழங்கியவர் அவர் என்று தெரிந்து கொள்ள வேண்டும் என்று அறியும் தருவாயில் வேறு விபரமான அறிக்கையின் அடிப்படையில் கடத்தியவர்களும் விசாரணையாளர்களும் தாம் யார் என்பதை மறைத்துள்ளனர். அதைக் கொண்டு அவர்கள் எந்தளவிற்குச் சட்டத்திற்கு அஞ்சாது செயற்பட்டுள்ளனர் என்பது தெரிகிறது.

*''இராணுவப் புலனாய்வுப் பிரிவினரைச் சோந்தவர்களோ தாமோ எப்பொழுதாவது முகமூடி அணிந்திருக்கவில்லை. எம்மை அடையாளம் கண்டு கொள்வார்கள் என்ற அச்சமோ இருந்திருக்கவில்லை. அதிகாரம் எங்கள் கையில் இருந்தது. ஒருவரும் எங்களைக் கைது செய்யமாட்டார்கள். கைது செய்யும் வேலையைச் செய்வது நாங்களே''.*

ஒரு ஆண் சாட்சி 2009 ல்

*''முகாமில் ஒரு வானில் என்னை வைத்திருப்பவர்கள் அந்த வானின் யன்னல்கள் வெளியிலிருந்து உள்ளிருப்பவர்களை பார்க்காத வகையில் நிறம் பூசப்பட்டிருந்தது. அதனால் யாரும் எம்மை அடையாளம் காண முடியாது. ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட ஆளனியினரை அவ்வாகனத்தில் யன்னலுக்கு அருகில் கொண்டு வந்து விட நான் அவர்களைப் பற்றி மேலதிக தகவல் கொடுக்கவேண்டியிருந்தது''.*

ஒரு ஆண் சாட்சி 2009 ல்

LTTE உறுப்பினராக இருந்து பின்னர் இராணுவப் புலனாய்வுப் பிரிவிற்கு தகவல் வழங்கியவர்களாக மாறியப் பின்னர் இலங்கைப் பாதுகாப்புப் பிரிவினருடன் வேலை செய்வது தொடர்பாக முக்கிய தகவல்களை வழங்கியுள்ளனர். கைது செய்யப்பட்ட LTTE போராளிகளை அதிகளவிலானோர் சித்திரவதைகள் மூலமோ அவர்களின் குடும்பங்களை அச்சுறுத்துவதன் மூலமோ தகவல்கள் வழங்கப்படுமாறு துாண்டப்பட்டுள்ளனர். இவ்வகையில் யோசப் முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த LTTE பெண் போராளிகளில் பலர் ஆட்சேர்ப்புக்கு இலக்காக்கப்பட்டுள்ளனர்.

*''தடுத்து வைக்கப்பட்டிருந்த பெண்கள் தங்கவைக்கப்பட்டிருந்த இடம் முகாமில் நடுப்பகுதி MIC அலுவலர்கள் தங்குமிடத்திற்கு அருகில் ஆனால் ஆண்களிற்கு எட்டாது துாரத்தில் இருந்தது. அவர்களின் பகுதிக்கு நான் அடிக்கடி அவர்கள் இடத்திற்க சென்றதில்லை. தடுத்துவைக்கப்பட்ட 3 பெண்கள் அங்கிருந்ததைக் கண்டேன். அவர்கள் சித்திரவதை செய்தப்பின் இராணுவத்திற்கு ஒத்துழைப்பு வழங்குபவர்களுடன் சேர்ந்துள்ளார்கள்''.*

ஒரு ஆண் சாட்சி 2009 ல்

LTTE யினரின் அதி இரகசிய கட்டமைப்பு பன்முகப்பட்டிருந்த நிலையில் அவர்களை எல்லாம் கண்டுப்பிடிப்பதற்கு சிறிலங்காவின் புலனாய்வுப் பிரிவினருக்கு எல்லா அலகுகளில் இருந்தும் பெண்கள் உட்பட, ஆட்கள் தேவைப்பட்டனர். இதன் தாக்கம் தமிழ் சமூகத்திற்கு முழுமையான பேரழிவாக அமைந்தது. இது பல்வேறு இளைஞர்களும் இளம்பெண்களும் ஆளுக்காள் காட்டிக்கொடுப்பவர்களாக மாறியுள்ளனர். அதன்விளைவு ஒருவர் இன்னொருவர்மீது நம்பிக்கை அற்று போனது மாத்திரம் அல்ல ஒரே இனம் என்ற அடயாளமும் மங்கி போயிற்று.

## முடிவும் பரிந்துரைகள்

இலங்கையின் பாதுகாப்பு படையினரின் கட்டமைப்பின் அச்சாணி யாக உள்ள யோசப் முகாம் தொடர்பில் நெடுநாட்களாக இருந்து வந்த குற்றச்சாட்டுகளை இவ் அறிக்கை மெய்ப்படுத்துகின்றது. இம் முகாம் தொர்டர்ந்து சட்டவிரோத தடுப்புகளுக்கும் விசாரணைக்குமாக பயன்படுத்தப்படுகிறது. இவ்விடத்தில்தான் சட்டத்தால் தம்மை கட்டுப்படுத்த முடியாதென்ற எண்ணத்தில் சித்திரவதைகளும் பாலியல் வன்முறைகளும் பரந்த அளவில் நடைபெற்று வந்துள்ளது. 2016ம் ஆண்டு டிசம்பர் வரை கூட இந்நிலை தொடர்ந்துள்ளது. சித்திரவதை செய்வதற்கும் பாலியல் வன்முறையில் ஈடுபடுவதுடன் பல்வேறு மனித உரிமை மீறல்களையும் செய்வதற்கென கவனமாகத் திட்டமிடப்பட்டு வேண்டுமென்றே பின்பற்றி வந்த கொள்கையிற்கமைய செயல்படவென்று இந்த முகாம் பேணப்பட்டு, அங்கு

சித்திரவதைக் கூடங்கள் நிர்மானிக்கப்பட்டு இருந்தன என்பதைச் சாட்சிகள் உறுதிப்படுத்தியுள்ளன. சித்திரவதை செய்வது பாதுகாகாப்புச் சேவையில் உள்ளவர்கள் தகவல் திரட்டிக் கொள்ள வசதியளித்தது மாத்திமன்றி பல சந்தர்ப்பங்களில் தடுத்து வைக்கப்பட்டவர்களை மானபங்கப்படுத்தி, சீர் குலையச் செய்வதற்கென வடிவமைக்கப்பட்டுள்ளது. அவ்வகையிற் செயற்படும்போது பாதுகாப்பு படையின் அங்கத்தவர்களின் கோரமான தடுப்புக்களையும் உரிமை மீறல் பற்றியும் தாம் அறிந்திருக்கவில்லை என்று இலங்கை இராணுவத்தின் உயர் மட்டத்தலைமைத்துவத்தில் உள்ளவர்களுக்கு அறிந்திராது இருப்பதற்கு சாத்தியமில்லை. மேலும் இவர்களுள் பலர் அம்முகாமிலேயே கடமைப் புரிந்துள்ளனர். தடுத்து வைத்திருப்பவர்களை விடுவிப்பதற்கு என்று லஞ்சம் கோரப்பட்டதாகவும் அச்சுறுத்திப் பணம் பெற்றுக்கொள்ளப்பட்டதாகவும் திரும்பத் திரும்பக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தமை இலங்கையின் பாதுகாப்புச் சேவைகளின் மையத்தில் ஒருங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்கள் நடைபெற்று உள்ளன என உறுதிப்படுத்துகின்றன. “நல்லாட்சி” புரிவது என்ற உறுதியுரையை வழங்கி தெரிவு செய்யப்பட்ட அரசு ஒன்றிற்கு இவ்விடையம் பெரும் கவலைகொடுக்கக்கூடியதாக இருக்க வேண்டும்.

ITJP யின் புலனாய்வுகளும் ஆவணப்படுத்தல்களும் இலங்கை பாதுகாப்பு படையினர் முரண்பாடு தொடர்ந்த காலங்களிலும் அதன் பின்னரும் அனேகமாக தமிழர் மீது சித்திரவதையும் பாலியல் வன்முறையுமான ஒரு கலாச்சாரத்தையும் பேணி வந்தனர் என்ற குற்றச்சாட்டையும் உறுதிப்படுத்தியுள்ளனர். இவ்வழிமுறை அவர்கள் மத்தியில் நிறுவனமயமாக்கப்பட்டுள்ளது என்பதையும் உறுதிப்படுத்தப்படுகின்றது. சிறிலங்கா சர்வதேசத்திற்கும் உள்ளகத்தில் உள்ளவர்ளுக்கும் இவ்வகையான துஷ்பிரயோகங்களை விசாரணை செய்து சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை உறுதியளித்திருந்த பொழுதிலும், மீறல்களில் ஈடுபடுவது என்பதும் அவற்றிற்கு தாம் பொறுப்புக் கூற நேராது என்பதும் இவ்வாறான செயல்களில் ஈடுபடுவோர் மனதில் மரபு வழியாக மனதில் ஆழவேர் கொண்டுள்ளது.

இலங்கை அரசு ஐக்கிய நாடுகளின் மனித உரிமை சாசனங்களை ஏற்று ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளமையால் சித்திரவதையும் துன்புறுத்தலும் தடைசெய்யப்படவேண்டியவை ஆகும். இலங்கை அரசியல் சாசனத்தில் 11 ஆவது அத்தியாயத்தில் 11ஆவது உறுப்புரை இவ்வாறு உள்ளது “எந்த ஒரு நபரும் சித்திரவதைக்கோ கொடூர மனிதாபிமானமற்ற அல்லது கீழ்தரமாக நடத்தப்படலோ தண்டிக்கப்படலோ ஆகாது”.

CAT க்க கீழான கடப்பாடுகளிற்கமைய செயற்படுவதென இலங்கை அரசு இணங்கி, 1994ம் ஆண்டின் 22ம் இலக்க சித்திரவதைக்கும் வேறு கொடூர மனிதாபிமானமற்ற அல்லது கீழ்தரமாக நடத்த அல்லது தண்டிப்பதற்கான சட்டத்தை நிறைவேற்றியுள்ளது. இச்சட்டத்தின் இரண்டாவது உறுப்புரைக்கமைய சித்திரவதை செய்யும் செயற்பாடுகளோடு ஈடுபடுவதும், பங்களிப்பதும், ஒத்ததாசையாக இருப்பதும், உதவுவதும், ஆதரவு அளிப்பது, தூண்டுவது மற்றும் சித்திரவதை செய்ய முயற்சிப்பது யாவும் 7 முதல் 10 வருட சிறைத் தண்டனையும் 10000 முதல் 50000(சுமார் $70 முதல் $350) ரூபா வரையான குற்றம் விதிக்கப்படக்கூடிய குற்றவியல் செயல்களாகும். இலங்கைத் தண்டனைக் கோவை (1987ம் ஆண்டின் 17ம் இலக்க கட்டளைச்சட்டமும் அதற்கான திருத்தங்களும்) உறுப்புரை 321, 322 க்கமைய இவ்வகையான செயல்கள் அதாவது வேண்டுமென்றே ஒருவருக்கு துன்பம் ஏற்படுத்துவது, தகவல் பெற்றுக் கொள்வதற்கோ அல்லது ஒப்புதல் வாக்குமூலம் பெற்றுக்கொள்வதற்கோ அல்லது ஒரு குற்றச் செயலைக் கண்டுப்பிடிப்பதற்காகவோ அவ்வாறு செய்வது ஒரு குற்றவியல் செயல் ஆகும். இவ்வகையான ஏதோவொரு செயலில் ஈடுபபட்டவர் குற்றவாளியாகக் காணப்பட்டால் ஆகக் குறைந்தது சிறைத்தண்டனையையும் குற்றப்பணம் செலுத்தும்படியும் விதிக்கப்படலாம்.

இலங்கையில் பாலியல் வன்முறை நடைபெற்றால் தற்போதுள்ள சட்டங்களிற்கமைவாக உள்ளகத்தில் கற்பழிக்கப்பட்ட என்றோ பாதுகாப்பில் இருக்கையில் கற்பழித்தார் என்றோ அல்லது பாலியல் துஸ்பிரயோகம் செய்யப்பட்டார் என்றோ வழக்குத் தொடரலாம். தடுத்துவைக்கப்பட்டிருக்கையில் கற்பழிப்பது என்பது ஒரு அரசு அலுவலர் அலுவலக ரீதியாக தன் பொறுப்பில் உள்ளபோது அல்லது பலோத்காரமாக ஒரு பெண்ணைத் தடுத்து வைத்து வன்முறையில் ஈடுபடுவது என்ற சட்டத்திற்கமைவாக தங்கள் பாதுகாப்பில் இருந்தவர்களிற்கு எதிராக பாதுகாப்பு படையினர் செய்திருந்தால் அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரலாம். இலங்கை அரசாங்கம் அரசியல் ரீதியாக பாலியல் வன்முறைகளை எதிர்கொள்வது என்று நினைத்தால் சித்திரைவதைகளிற்கெதிரான சட்டத்தைப் பயன்படுத்தி நீதிமன்றத்தின் முன்

நிறுத்தலாம். இலங்கையில் பரந்தளவில் பாலியல் வன்முறைகள் நடைபெற்றதினைக் கருத்திற்கொண்டு முரண்பாடுகள் தொடர்ந்த காலப்பகுத்தில் நடைபெற்ற பாலியல் வன்முறை கற்பழிப்பு போன்ற செயல்களை பாரிய தேசக் குற்றமாக கருதி நடவடிக்கை எடுக்கலாம். இலங்கை அரசாங்கம் றோம் ஸ்டயூட் (Rome Statute) என அழைக்கப்படும் சட்டத்திற்கு இசையவில்லை மாத்திரமன்றி உலக சட்டத்தில் "Command Responsibility" கட்டுபடபாட்டுப் பொறுப்பை சேர்த்துக் கொள்ளவில்லை. ஐ நா மனித உரிமைகள் ஆணையாளர் இவ்விடயம் தொடர்பான உத்தேச நீதிப்பொறி முறையை நிர்மாணிப்பதற்கு முன் இதனை உள்ளகச் சட்டத்தில் சேர்க்கும்படி சிபார்சு செய்துள்ளார். அவ்வாறு செய்யத் தவறியமை தண்டணையிலிருந்து தப்புவதற்கான இடைவெளியை ஏற்படுத்தியுள்ளது. அதனால் பாதுகாப்புப் படையினர் செயற்படும் முறையில் சட்டத்திற்கமைவாக செயற்படாது அதன் பிடிக்குள் சிக்காது செயற்பட வழி செய்கிறது.

இவ்வகையான குற்றங்கள் நடைபெறுவதினை தவிர்ப்பதற்கான சட்ட வலையமைப்பு போதியளவில் தடை செய்யவோ பரிகாரம் வழங்கவோ தவறியுள்ளன. பாதுகாப்புப் படையைச் சேர்ந்த ஒரு சிலரே சித்திரவதை செய்தமைக்கோ பாலியல் வன்முறைக்கோ பொறுப்புச் சுமத்தப்பட்டடுள்ளது. எனினும் அவர்களுள் எவரேனும் யோசப் முகாமில் நடைபெற்ற சம்பவங்களுக்காக அல்ல. இதனால் இலங்கையின் குற்றவியல் நீதித்துறையின் நம்பகத் தன்மை பற்றி பெரும் கவலை ஏற்படுத்துகின்றது.

யோசப் முகாமில் நடைபெற்ற சித்திரவதை தொடர்பிலும் திரும்ப திரும்ப செய்யப்படும் முறைப்பாடுகள் தொடர்பில் திருப்பிகரமாக செயற்படத் தவறும் இடத்தில் அரசாங்கத்தின் நிலைப்பாடு சந்தேகத்திற்கிடமாகி விடும். மனித உரிமைக் கவுன்சிலில் 34வது கூட்டத்தொடரில் இலங்கையின் வெளிநாட்டமைச்சர் கூறிய வகையில் சித்திரவதைக்கு "பூச்சியம் சகிப்புத் தன்மையுள்ள கொள்கையை" (policy of zero tolerance to torture) பின்பற்றுவதாகக் கூறியது யதார்த்த நிலைக்கு முரணாதாக அமையும். தொடர்ந்து நடைபெற்று வரும் மீறல்களும் துஸ்பிரயோகங்களும் இலங்கை அரசாங்கத்தினால் வாக்களித்தவாறு துஸ்பிரயோகங்களை எதிர்கொள்வது என்ற வாக்களிப்பின் நம் பகத்தன்மைக்கு ஒரு சவாலாக அமைகிறது. அதன் தொடர்ச்சியாக அரசு நிலை மாறும் கால நீதி நிகழ்ச்சி (transitional justice programme) நிரலின் நம்பகத்தன்மைக்கு ஒரு சவாலாக அமையும். பொருத்தமான பரிகாரங்கள் செய்யத் தவறுவது இணைந்த சிறிசேன அரசாங்கத்தின் அரசியல் திடசங்கற்பமின்மையை காட்டுகின்றது.

## பரிந்துரைகள்

**மனித உரிமைகள் சபையின் அங்கத்துவ நாடுகளின் 2017ம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்றுக்கொண்டிருந்த 36வது கூட்டத்தொடருக்கு பின்வரும் வேண்டுகோளை முன்வைக் படுகிறது :**

**(அ)** a) ஐநாவின் சித்திரவதை கொடூர மனிதாபிமானமற்ற கீழ்தரமான செயல்களுக்கு தண்டனை வழங்குவது தொடர்பான விசேட அறிக்கையாளரும், b) ஐநாவின் சித்திரவதைக்கெதிரான குழுவின் இலங்கை விவகாரங்களிற்கு பொறுப்பான அங்கத்தவரும் இணைந்து யோசப் முகாமையும் CID யின் நாலாம் மாடியையையும் சென்று பார்க்க வேண்டும். இப்பயணத்தின் பொழுது சம்பந்தப்பட்ட இடங்களை ஆழமாக அவதானித்து அங்கிருக்கும் சகல கட்டமைப்புகளையும் சட்ட வைத்திய பரிசோதனைகளையும் முன்னர் விண்வெளியில் எடுத்தப்படங்களையும் தற்போதுள்ள படங்களையும் பார்வையிட்டு இராணுவத்தின் பதிவுகளையும் கணக்குவிபரங்களையும் பரிசீலனை செய்து அவற்றுள் போக்குவரத்து பற்றிய குறிப்புகள் போன்றவற்றை இராணுவத்தினர் முழுமையாக வழங்க வேண்டும். அத்துடன் அவ்விடங்களில் தடுத்து வைத்து தப்பியவர்களுள் இலங்கையில் உள்ளவர்களையும் இலங்கைக்கு வெளியே உள்ளவர்களையும் பேட்டி காண வேண்டும்.

**(ஆ)** குறித்த பயணத்தின் பின்னர் (a) சித்திரவதை கொடூர மனிதாபிமானமற்ற கீழ்தரமான நடத்துதல் அல்லது தண்டனை வழங்குதல் போன்றவற்றிற்கான விசேட அறிக்கையாளர்களும் (b) ஐ நா வின் சித்திரவதையின் குழுவின் இலங்கைக்கு பொறுப்பானவரும் அணைத்து மனித உரிமை மீறல்கள் ஈடுபட்டவர் என ஐ நா அறிக்கைகளில் குற்றம் சாட்டப்பட்டவர்களின் பெயர்ப்பட்டியல் ஒன்றைத் தயாரித்தல் வேண்டும். அப்பட்டியலில் கடந்த காலத்தில் விசேட

அறிக்கையாளர்களின் குறிப்பிட்ட பெயர்களும் உள்ளடக்கப்பட வேணடும். அப்பட்டியலை அரசாங்கத்திடம் சமர்ப்பித்து சித்திரவதைக்கு பொறுப்புக் கூறல் தொடர்பில் உண்மையான கரிசனை உண்டா என்று காட்டுவதற்கு குறித்த நபர்களை சேவையிலிருந்து இடைநிறுத்தி உடனடியாக அவர்கள் தொடர்பில் புலன்விசாரனைகள் நடத்தப்பட்டு ஒரு வருட காலத்தினுள் அது தொடர்பாக ஐ நா சபைக்கு அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும்.

**இலங்கை அரசாங்கத்திதிற் காண பரிந்துரைகள் :**

கடந்த பல ஆண்டுகளாக யோசப் முகாம் ஒரு சட்ட விரோத தடுப்பு முகாமாக பயன்படுத்தப்பட்டு வந்தது என்பதை அரசு வெளிப்படையாக ஏற்றுக் கொண்டு, இம்முகாமினுள் இயங்கி வரும் அங்கீகரிக்கப்படாத தடுப்பு முகாம் இருப்பின் அவற்றை உடனடியாக மூடிவிட வேண்டும் என்று (ஐ நா வின் சித்திரவதை கொடூர மனிதாபிமானமற்ற கீழ்த்தரமான செயற்பாடுகள் அல்லது தண்டனைகள் வழங்குதல் போன்றவற்றிற்கான விசேட அறிக்கையாளர்) ஏற்கனவே சிபார்சு செய்துள்ளவாறு அவ்வாறு செய்தப்பின் உடனடியாக பின்வரும் தடுப்பு நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

- அம்முகாமின் நுழைவாசல் யாவற்றிற்கும் உள்ளேயும் வெளியேறும் வீடியோக் கமாராக்கள் பொருத்தப்பட வேண்டும்(சித்திரவதை தொடர்பான விசேட அறிக்கையாளர் பெயர் குறிப்பிடும் இத்துறையில் நிபுணத்துவம் வாய்ந்த ஒருவர் இவை பொருத்தப்படவேண்டிய இடங்களையும் கோணத்தையும் தெரிவு செய்வார். இக்கமாராக்களின் செயற்பாடுகளையும் பதிவுகளையும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலர்கள் தூர இருந்தே கண்காணிக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும். அக்கமாராக்களின் வீடியோப் பதிவுகளையும் பெறுபேறுகளையும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, சித்திரவதைக்கு எதிரான ஐ நாவின் குழுவிற்கு மூன்று மாதத்திற்கு ஒரு தடவை சமர்ப்பித்தல் வேண்டும். இவ்வாறு மூன்று மாத கால அவகாசம் கொடுக்கப்படுவது அந்நிலையத்தின் பாதுகாப்புத் தொடர்பான சட்டபூர்வ நடவடிக்கைகளுக்கு பங்கம் விளைவிக்காமல் இருப்பதற்காகவே.
- யோசப் முகாமின் விபரங்கள் அடங்கிய வரை படம் ஒன்றினை ஐ.நாவின் சித்திரவதைக் கெதிரான குழுவிடம் சித்திரவதை தொடர்பான விசேட அதிகாரிடமும் பகிந்து கொள்ள வேண்டும். அத்துடன் இம்முகாம் அமைந்துள்ள இடத்தின் மூல உரிமையாளரின் விபரங்களும் கடந்த பல ஆண்டுகளாக இயங்கி வந்த அலகுகளை கண்டு குறிப்பாக பயங்கரவாதத்தித்குற்கு எதிரான செயல்பாடுகளின் இராணுவ புலனாய்வாளர்களும் பொலிஸ் பயங்கரவாத பிரின் (TID) செயல்பாடுகளும் அவர்களின் அதிகாரபத்திரங்களும் அவர்களின் கட்டளை வழங்கும் அதிகார கட்டமைப்பையும் நபர்களையும் அவர்களுக்கிருந்த தொடர்பகளையும் ஆராயபப்படுதல் வேண்டும்.
- யோசப் முகாமில் யார் யார் எல்லாம் தடுத்து வைக்கப்பட்ருந்தார்கள் விபரமும், எவ்வளவு காலம் அங்கு தடுத்து வைக்கப்பட்டார்கள் என்ற விபமும், அவர்கள் இருந்த அலகிற்கு யார் பொறுப்பாய் இருந்தார்கள் என்பது ஐ.நாவின் சித்திரவதைக் குழுவிற்கும் விசேட அறிக்கையாளருக்கும் வழங்கப்படுதல் வேண்டும்.
- பிரேசில் நாட்டில் ராஜாதந்திர நியமனம் ஒன்றைப் பெற்று ஸ்தானிகராகக் கடமை புரியும் **ஜெனரல் ஜெகத் ஜெயசூரியவை** திரும்ப அழைத்து 2007 இருந்து 2009 வரையிலான காலத்தினுள் யோசப் முகாமில் நடைபெற்ற சித்திவதைகள் தொடர்பாக சுயாதீனமான நம்பகரமான சிவிலியன் புலனாய்வு ஒன்று உடனடியாக நடத்தப்படல் வேண்டும். அல்லது புலனாய்வு நடத்தப்பட்டு ஒரு வருட காலத்தினுள் அவ்வறிக்கை ஐ நாவின் சித்திரவதைக்கு எதிரான குழுவிற்கும், சித்திரவதை தொடர்பான விசேட ஆணையாளருக்கும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
- யோசப் முகாமில் விசேடமாக யுத்தத்தின் பின்னான காலத்தில் கட்டளையிடும் பதவியில் தற்போது இருப்பவர்களை உடனடியாக வேலையிலிருந்து இடைநிறுத்தி அங்கிருந்து ஒய்வு பெற்றவர்களையும் குறிப்பாக மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன (முன்னால் பிரேசில் நாட்டின் ஸ்தானிகர்) முதலியோர் தொடர்பில் புலனாய்வுகளை நடத்துதல் வேண்டும். **மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன** அவர்கள் ஐ நாவின் கூற்றுப்படி யுத்தம் முடிவடையும் காலத்தில் 53ம் இலக்கப்பிரிவில் கட்டளையிடும் தளபதியாக இருந்துள்ளார். 53ம் பிரிவில் உள்ளவர்களே சரணடைந்த தமிழ் பெண் தொலைக்காட்சி அறிவிப்பாளராக இருந்த இசைப்பிரியாவை கொலை செய்ததில் சம்பந்தப்பட்டவர்கள் என்று ஐ நா அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. மேலும் 53ம்

இலக்கப்பிரிவிலே சித்திரவதை செய்வதில் ஈடுப்பட்டிருந்தாக கூறப்பட்ட 3 இராணுவ பிரிகேட்களில் ஒன்று என்று ஐ நா அறிக்கைகளில் கூறப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் இப்பிரிவிற்கு போர் நடைபெற்ற பகுதிகளிலிருந்த ஆஸ்பத்திரிகளும் ஐ நாவின் மைய அலுவலகமும் இராணுவ படையினரால் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டது என்பது இப்பிரிவினருக்கு தெரிந்திருந்தது என்று ஐ நா அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏனெனில் இப்பிரிவினர் இருந்த நிலையில் இருந்து இச்சம்பவங்களை அவர்கள் நேரடியாக பார்க்கக்கூடியதாக இருந்துள்ளது.

~~~~~~~~~~~~~~~~
~~~~~~~~~~~~~~~~





"I still wake up screaming. Sometimes I feel so angry I hit the wall with my fists. I also feel very alone and sad. I don't want to eat. I don't want to come out of my room."

**MALE SURVIVOR TORTURED IN 2013 IN JOSEPH CAMP**

